Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
பலநோக்கு கூ.ச. முன்பாக 40, ஆஸ்பத்திரி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 7835 Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
T.P: 021 222 7560 Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 23 (09.09.2004) வியாழக்கிழமை இதழ்:342

### மட்டக்களப்பு – புல்லுமலையில்

# புலிகளின் முகாம் மீது தாக்குதல்

# பதில் தாக்குதலில் இருவர் பலி!

## இராணுவத் தரப்பு மீது புலிகள் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்புறத்திலுள்ள புல்லுமலை என்ற இடத்தில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றை சுற்றிவளைத்துத் தாக்க முயன்ற இராணுவ மற்றும் கருணா குழுவினர் மீது விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் தாக்குதல் நடத்தச் சென்றவர்களில் இருவர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்த தமது சகாக்களுடன் தப்பியோடிவிட்டதாக கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.**

நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

மட்டக்களப்பிலிருந்து 65 கி.மீ தொலைவிலுள்ள புல்லுமலை என்ற இடத்திலுள்ள புலிகளின் முகாம் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் ஆயுதம் தாங்கிய குழுவொன்று தாக்குதலை மேற்கொண்டது.

கருணா குழுவுடன் இணைந்து இராணுவ கொமாண்டோக்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக விடுதலைப் புலிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 34 ஆயுதம் தாங்கிய நபர்களைக் கொண்ட இந்தக்குழு புலிகளின் முகாம் மீது தாக்குதல் தொடுத்த அதேவேளை, புலிகள் கடும் பதில் தாக்குதல் நடத்தி தமது முகாம் மீதான தாக்குதலை முறியடித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை தளபதியாக வைஸ் அட்மிரல் சந்தகிரி

(கொழும்பு)



முப்படைகளின் கூட்டுத்தலைமை அதிகாரியாக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே இந்த நியமனத்தை நேற்று வழங்கினார். இராணுவத்தளபதியாகவும், முப்படைகளின் கூட்டு தலைமை அதிகாரியாகவும் இருந்துவந்த லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வுபெற்ற பின்னர் முப்படையினதும் கூட்டுத்தலைமை அதிகாரியாக எவரும் நியமிக்கப்படவில்லை.

இரண்டு மாதங்களின் பின்னரே கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முப்படைகளின் தலைமை அதிகாரியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்தியோர் குறித்து எதுவும் கூறமுடியாதுள்ளது!

### கண்காணிப்புக்குழு பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு - புல்லுமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியோர் குறித்து எதுவும் கூற முடியாதிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் புல்லுமலை சோதனைச்

## மட்டு - புல்லுமலை தாக்குதலுடன் படையினருக்குத் தொடர்பில்லை!

### மறுக்கிறார் இராணுவத் தளபதி



காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும், இராணுவத்தினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்

விடுதலைப் புலிகள் தமது உள் வீட்டுப் பிரச்சினையை தாமே தீர்த்துக் கொள்ளவேண்டும். படையினர் இதில் எவ்விதத்திலும் தலையிட மாட்டார்கள்.

கிழக்குப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஆயுதங்களு

(கொழும்பு)

மட்டக்களப்பு - புல்லுமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தியோர் குறித்து எதுவும் கூற முடியாதிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் புல்லுமலை சோதனைச் சாவடி மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவ்வாறு தாக்குதல் நடத்தச் சென்றவர்கள் மீது விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கியதாகவும் அவ்வேளை தாக்குதல் நடத்தியோரில் இருவர் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கருகில் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் குழுவினர் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்ற சிலர் தாம் காவி வந்த உடல்களை இராணுவ (12 ஆம் பக்கம் பார்க்க)



## மறுக்கிறார் இராணுவத் தளபதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் - புல்லுமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும், இராணுவத்தினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்தச் சம்பவம் நடைபெற்றது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலாகும். இந்தச் சம்பவத்தில் படையினர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கருணா குழுவினருக்கும் படையினர் உதவியதாக தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டுக்களும் தவறானதாகும்.

விடுதலைப் புலிகள் தமது உள் வீட்டுப் பிரச்சினையை தாமே தீர்த்துக் கொள்ளவேண்டும். படையினர் இதில் எவ்விதத்திலும் தலையிட மாட்டார்கள்.

கிழக்குப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஆயுதங்களுடன் வரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் கருணா குழுவினர் ஆகியோரை நாம் கைது செய்தே வருகின்றோம்.

அத்துடன், விடுதலைப் புலிகள் பல யுத்தநிறுத்த மீறல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டும்!

## அரசு - புலிகளிடம் அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் தலைவர் லார்ஜ்ஜே கொபர் பிளக் தெரிவித்தா.

நேற்று இலங்கை வந்த கொபர் பிளக் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அரசாங்கத் தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.



இலங்கைவந்த கொபர் பிளக் சமாதானப் பேச்சுக்களை மீள முன்னெடுப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவருவதே இலங்கை அரசின் நோக்கம் என்பதை நாம் நம்புகின்றோம். விடுதலைப் புலிகளும் சொல்லாலும், செயலாலும் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அமைதிச் சூழலை ஏற்படுத்த வேண்டுமாயின் சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து செல்வதற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் ரணில் இன்று முக்கிய பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலைகுறித்து - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இன்று சந்திப்பு நடைபெறவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இன்று நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது - தற்போது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து விரிவாக ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வு உடபட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகமோ ஐக்கியதேசியக் கட்சியோ எந்தத் தகவலையும் இதுவரை வெளியிடவில்லை. (01)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நெடுந்தீவில் நடமாடும் சேவை

## 200 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதான நிலைமை காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று தற்போது நெடுந்தீவில் மீண்டும் குடியமர்ந்துள்ள குடும்ப அங்கத்தவர்களின் நிர்வாகத்துறை சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் நடமாடும் சேவை நேற்று யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த இடம்பெயர் சேவையில் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி அக்ரன் றெகாச் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் சந்திரசேகர மற்றும் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இடம்பெயர் சேவையில் மீளக்குடியமர்ந்தவர்களில் 220 பேர் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டனர். இதில் 14 குடும்பங்கள் திருமணப் பதிவுகள், சுமார் 70 பேர் வாக்காளர் இடாப்பில் பெயர் இணைத்தல், சுமார் 60 பேர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் மற்றும் சுமார் 30 பேர் காலங்கடந்த பிறப்பினைப் பதிவு செய்தல் மற்றும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு போன்ற சேவைகள் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சேவைக்கென நெடுந்தீவு சமாதான நீதிவான்கள், நெடுந்தீவு பொலிஸார், தபாலகத்தினர், விவாகப் பதிவாளர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். (113)

# வலயமட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள் விபரம்!

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் அண்மையில் யாழ்.வலயக் கல்விப்பணிமனையால் வெளியிடப்பட்டிருந்தது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றுமுன்தின தொடர்ச்சி வருமாறு :-

### தரம் 8

நிஷாந்திகா வாமசிவம் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கதிர்காமநாதன் அஞ்சுகன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), நரேந்திரன் திருத்தணிகம் (யாழ்.இந்துக் கல்லூரி).

### தரம் 9

சர்ஜனா கருணாகரன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), குகணேஸ்வரன் ஹர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), தயாபரன் திவாகர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

### தரம் 10

தர்ஷனா ரவீந்திரன் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கிரிஸ்பினி மைக்கேல் (திருக்குடும்ப கன்னியர்மடம்), மிஷாந்தி சந்திரசேகரம் (ஆவரங்கால் நடராசா இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

### தரம் 11

சகாதேவன் விதுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), சாந்தநாயகம் நிஷாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), தனபாலசிங்கம் சஞ்சீவன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

### தரம் 12

அபிராமி யோகேஸ்வரன் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), யோகேந்திரன் பிரதீபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), அபிரா குமாரசிவானந்தன் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### தரம் 13

கதிரேசப்பிள்ளை தர்சனன் (யாழ்.இந்துக் கல்லூரி), சிவப்பிரகாசம் மயூரன் (யாழ்.இந்துக் கல்லூரி), நோலினி ஜீவிதா பெனடிக்ற் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

### குழு நிகழ்வுகள்

**தரநிலை**

**ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம் - சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2 ஆம் இடம் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, 3 ஆம் இடம் - சென்.திரேசா மகளிர் கல்லூரி.

**கீழ் நிலை**

**ஆண்கள் பிரிவு**

முதலாம் இடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**கீழ் நிலை**

**பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் - சென்.திரேசா மகளிர் கல்லூரி.

**மேல் நிலை**

**பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், 2 ஆம் இடம் - சென்.திரேசா மகளிர் கல்லூரி.

**நாடகம்**

**ஆரம்பப் பிரிவு**

முதலாம் இடம் - யாழ்.இந்து ஆரம்ப பெண்கள் பாடசாலை, 2 ஆம் இடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**கீழ் நிலைப் பிரிவு**

முதலாம் இடம் - வேம்படி மகளிர் கல்லூரி.

**மேல் நிலை**

**கவிதை**

முதலாம் இடம் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**மேல் நிலை**

**உரையாடல்**

முதலாம் இடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரிசென்.பற்றிக்ஸ் கல்லூரி, 2 ஆம் இடம் - சிறி சோமஸ்கந்த கல்லூரி.


**வீடு தேவை**

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்துக்காக உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைகக்கு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர்,
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.பே. இல : 2225657
(925)

**சிறு விளம்பரம்**

**முகமதி கிறைண்டிங் மில்**

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் பூடு, ஊறுகாய், மோர் மிளகாய், சீயாக்காய் பவுடர், பிளீச்சிங் பவுடர், ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல.777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/3022)


# ஆங்கில தின போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

சிரேஷ்ட பிரிவுக்கான நாடகங்கள் இரண்டும், சிரேஷ்ட பிரிவு ஆண், பெண்களுக்கான குழுப்பாட்டு, தரம் 9,11 ஆகிய வகுப்புக்களுக்கான பா ஓதல் போட்டிகள், சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சகல பிரிவுகளுக்குமான எழுத்தாக்கப் போட்டிகள் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறுமென ஆங்கில தின போட்டிகளுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார். (101)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

சமுர்த்தி அதிகாரசபையின் சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு - யாழ்.பிரதேச செயலாளர் தலைமையில் எழுத்தறிவு குறைந்த வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவமும், சமுர்த்தி கொடிவாரத்தையொட்டி சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் விதவைகளுக்கும், அங்கவீனர்களுக்கும் சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் கா.வீரபத்திரபிள்ளையும், சிறப்பு விருந்தினராக சமுர்த்தி உதவி ஆணையாளர் தி. மகேஸ்வரகுமாரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வு யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வலயக் காரியாலயத்தில் இன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## கலந்துரையாடல்

தென்பகுதி பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் அனைத்துப்பீட யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பேராதனை, மொறட்டுவ, கொழும்பு, றுகுணு, சப்ரகமுவ, வயம்ப, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கிழக்கு பல்கலைக்கழகங்களினதும் அனைத்துப்பீட யாழ்.மாவட்ட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு - சர்வதேச மாணவர் பேரவையினர் தெரிவித்தனர்.

★ ★ ★

தமிழ் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் மற்றும் அமைச்சின் பணிப்பாளர் சிறிதேவி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


**நாகம்ஸ்** சுன்னாகம்




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

**மதுர**



காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந் (இருவேடம்), குஷ்பு நடித்த

**வீரம் விளைந்த மண்ணு**



வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

காட்சி நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே.)

Strike Force

(சி-2723)


# சின்னமுத்து தடுப்பு மருந்து ஏற்ற மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## யாழ்.மாநகரசபையினர் கோரிக்கை

சின்னமுத்து - ரூபெல்லா தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தில் பங்குபெறும் தொண்டர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென, யாழ். மாநகரசபையினர் கேட்டுள்ளனர்.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் யாழ்.மாவட்டத்திலுள்ள 16 - 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான சின்னமுத்து - ரூபெல்லா தடுப்பு மருந்தேற்றல் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், முதலுதவி நிலையங்கள், கல்வி நிலையங்கள் போன்ற இடங்களில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளது.

இந்த மருந்தேற்றல் திட்டத்தில் யாழ்.மாநகரசபை ஊழியர்களில் 250 ற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஏற்கனவே இந்தத் தொண்டர்களுக்காக - லயன்ஸ் கழகத்தினர், பாஷையூர் கடற்தொழிலாளர் சங்கத்தினர், குருநகர் கடற்தொழிலாளர் சங்கத்தினர் ஆகியோர் நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கான கூட்டம்

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட தெல்லிப்பளை, உடுவில், சங்கானை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்படவிருப்பதால் சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (101)

**நமது ஈழநாடு**

# இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

## போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

**மத்திய பிரிவு-** க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

**மேற்பிரிவு -** அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:-

நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

- நமது ஈழநாடு பணிமனை
யாழ் சாலை,
கிளிநொச்சி.

# கிழக்கில் படையினரைப் பலப்படுத்த அதிரடிப்படைக்குப் பாரிய முகாம்!

(அம்பாறை)

விசேட அதிரடிப் படையினரின் சேவையை விஸ்தரிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத் திட்டத்தின் கீழ், புதிதாக வேலைக்கமர்த்தப்படவுள்ள இரண்டாயிரம் விசேட அதிரடிப்படையினரின், ஒரு பகுதியினர் நுவரெலியாவிலும் இன்னுமொரு பகுதியினர் அம்பாறையிலும் நிலைகொள்ள வைப்பதற்காக, புதிய முகாம்கள் அமைக்கப்படத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அம்பாறை பகுதியில் முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் வேலைக்கமர்த்தி, ஆகக் குறைந்த பயிற்சியுடன் உயர்ந்த சம்பளத்தில் விசேட அதிரடிப்படை முகாம்களில் நிலைகொள்ள வைப் பதன் மூலம், கிழக்கில் அரசின் பலத்தை அதிகரிக்கவே இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விடயத்தில் ஜனாதிபதியின் உத்தரவை ஏற்கனவே பெற்றுவிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்குக்கான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இதற்காகப் பெருமளவில் ஆயுதக் கொள்வனவுக்கு ஒழுங்கு செய்துவிட்டதாகவும், மிகவிரைவில், இந்த விசேட அதிரடிப் படையினருக்கான முகாம்கள் இரு இடங்களில் பெரிய அளவிலும், ஏனைய சிறிய முகாம்கள் வேறு சில இடங்களிலும் அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிககப்படுகிறது.

படை முகாம்களை அமைக்க முயன்றால் வரக் கூடிய எதிர்ப்பைச் சமாளிக்குமுகமாக, பாரிய காணிகளுடன் கூடிய வீடுகளை, இந்த விசேட அதிரடிப்படையினரின் தேவைக்குப் பாவிக்க உத்தேசித்துள்ளதாகவும், அரச காணிகளில் புதிய வீடமைப்புத் திட்டமாக இவை அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் அரச உள்துறை அமைச்சிலிருந்து கசிந்த தகவல்கள் தெரிவித்துள்ளன.

# தப்பியோடிய சிப்பாயிடம் 7 அங்குல கைத்துப்பாக்கி

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவரை 7 அங்குல நீளமுள்ள கைத்துப்பாக்கியுடன் பொலநறுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவரை பஸ் நிலையம் ஒன்றில் வைத்து பொலிஸார் கைது செய்தபோது, அவரிடம் இருந்து 7 அங்குல நீளமுடைய கைத்துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இந்த கைத்துப்பாக்கி வழக்கத் துக்கு மாறாக ரி-56 ரவையைப் பயன்படுத்தக்கூடியதென பொலிஸ் அதிகாரி வசந்த பெரேரா தெரிவித்தார்.

பாதாள உலக குழுவொன்றுடன் இணைந்து செயற்பட்ட இந்த சந்தேக நபரை விசாரணைகளுக்காக பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

# அமைச்சர்கள், எம்.பிக்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை, இந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து உயர்த்தியுள்ள அரசு, முடிவடைந்த மாதங்களுக்கான சம்பள மீதித் தொகையையும் இம்மாதம் முதல் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமைச்சர் ஒருவரின் மாதாந்த சம்பளம் 29 ஆயிரத்திலிருந்து 33, 640 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சம்பளம் 23 ஆயிரத்திலிருந்து 32,575 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுதவிர, இவர்களுக்கான பயணச் செலவுகளுக்காக மாதம் 15 ஆயிரம் ரூபாவும், கையடக்கத் தொலைபேசிக்காக 2ஆயிரம் ரூபாவும், நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஒரு நாளுக்கு 500 ரூபா மற்றும் தொழில் ரீதியான தொலைபேசிச் செலவுகள், அலுவலகச் செலவுகள், வெளிநாட்டுப் பயணச் செலவுகள், கடமைநேர உணவு செலவுத்தொகை போன்ற இன்னோரன்ன பல தொகைகளும் மாதாந்தம் இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, உச்ச நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவற்றின் நீதிபதிகள், தலைமை நீதிபதிகள் போன்றோரின் சம்பளத்தையும் அரசு உயர்த்தவுள்ளதாகத் தெரியவருகிறது. (01)(தே)

# இந்திர டி சில்வாவுக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்க நடவடிக்கை

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவுக்கு பதிலாக புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திர டி சில்வாவின் பதவிக் காலம் எதிர்வரும் 30 ஆம் திகதி முடிவடைகிறது. இதனையடுத்து 2005 ஆம் ஆண்டு பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையிலுள்ள சந்திரா பெர்னான்டோ, காமினி ரனதெனிய, போதி லியனகே போன்றோரில் ஒருவர் இந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், உதவி பொலிஸ் மா அதிபர்களான சிறிசேன ஹேரத், செனவிரட்ன பண்டா, ஜெயந்த விக்கிரமரட்ன, குமாரசிறி கமகே, விக்டர் பெரேரா மற்றும் மஹிந்த பாலசூரிய ஆகியோரும் அடுத்து வரும் பொலிஸ் மா அதிபர் நிலைக்காக ஜனாதிபதியினால் சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்படும் வாய்ப்பு கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து கருத்துத் தெரிவிக்க வேண்டாம்

## - அமைச்சர்களுக்கு சந்திரிகா எச்சரிக்கை



தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவேண்டாமெனவும், அந்த விடயத்தைத் தான் மட்டும் பார்த்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி சந்திரிகா அமைச்சாகளுக்குக் கடுமையான உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர்கள் பலரும் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள், யுத்தநிறுத்தம், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் போன்றன குறித்துப் பலவித கருத்துக்களையும் முன்வைத்திருந்தார்கள்.

குறிப்பாக ஜே.வி.பி அங்கத்தவர்கள் பலரும் மிகக் கடுமையான வாத, பிரதிவாதங்களை முன்வைத்து வரும் நிலையிலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தற்போதைய சமாதான நிலைப்பாடுகள் குறித்துக் கருத்துக் கூற விரும்புவோர், நேரடியாகத் தன்னுடன் பேசும்படியும், அதற்கான விளக்கத்தைத்தரத் தான் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## - திருமலை-துவரங்காட்டு சந்தியில் -

# தனியார் காணியில் கடற்படை புதிய காவலரண் அமைப்பு!

## ~ கண்காணிப்புக் குழுவிடம் புகார்

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டை வீதியில் துவரங்காட்டு சந்திக்கு சமீபமாக தனியார் ஒருவரின் காணியொன்றில் கடற்படையினர் புதிய காவலரண் ஒன்றை அமைத்து வருவதாக அந்தப் பகுதி மக்கள், கண்காணிப்பு குழுவினரிடம் முறையிட்டுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்து வருவதாக குற்றஞ்சாட்டிய படையினா, தற்போது பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனா.

துவரங்காட்டுச் சந்தியில் தனியார் ஒருவரின் காணியின் வேலிகளை அகற்றிய கடற்படையினர் கடந்த வாரம் முதல் பெரியளவிலான காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர். பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள இந்தப் பகுதியில், படையினர் புதிய காவலரண்களை அமைத்துள்ளமை இந்தப் பகுதி மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

படையினர் அமைத்துள்ள இந்த பாரிய காவலரணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் - திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக்காணிப்புக் குழுவினர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சேது சமுத்திரத் திட்டத்தினால் யாழ்.குடாநாட்டுக்கும் பாதிப்பு

சேது சமுத்திர திட்டத்தினால் யாழ்.குடாநாட்டுக்கும், மன்னார் குடாவுக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாக்கு நீரிணையின் ஊடாக சர்வதேச கப்பல் போக்குவரத்தை மேற்கொள்வதற்காக சேது சமுத்திரத் திட்டத்தை இந்தியா முன்னெடுத்துள்ளது. இதன் கீழ் மன்னார் வளைகுடாவையும், வங்காள விரிகுடாவையும் இணைக்கும் கடற்பகுதியில் 300 மீற்றர் அகலதுக்கு 12.8 மீற்றருக்கு ஆழப்படுத்தி, இரு வழிப்போக்கு வரத்துக்கான பாதை ஒன்றை அமைக்க இந்தியா சுமார் ஐயாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதன் காரணமாக மன்னார் கடல் பகுதியில் அமைந்துள்ள மணல் திட்டுகள் பாதிக்கப்படுவதன் காரணமாக, மன்னார் பகுதியில் கடலரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் நீர் மட்டம் கடலடியை விட தாழ்ந்த நிலையில் காணப்படுவதால், சேது சமுத்திரத் திட்டத்தினால் அந்த நீர் உவர்த் தன்மையாக மாறும் அபாயம் இருப்பதாக இலங்கை சூழலியல் மன்ற தலைவர் விநோத் முனசிங்க எச்சரித்துள்ளார்.

# பொலிஸ் உத்தியோகத்தர் கைது

மட்டக்களப்பு - புல்மோட்டைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் அத்துமீறி பிரவே சித்த பொலிஸ் உத்தியோகத்தரை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்தனர்.

எனினும் இவர் நேற்றுமுன்தினம் மாலை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதனையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை மகா ஓயா பொலிஸ் நிலையத்தில் கையளித்தனர்.

# இராணுவத்தினரின் போக்குவரத்துக்கு திருத்தப்பட்ட அன்ரனோவ் விமானங்கள்!

யாழ்.குடாநாட்டுக்குப் படையினரை ஏற்றி இறக்குவதற்காக எதிர்வரும் வாரத்துக்குள் இரண்டு அன்ரனோவ் - 32 ரக விமானங்கள் திருத்தப்பட்டு, உக்ரேயினிலிருந்து இலங்கைக்குக் கொணடுவரபபடவுள்ளதாக விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

வடக்கிற்குப் படையினரை ஏற்றி இறக்கும் நான்கு அன்ரனோவ் - 32 ரக விமானங்கள் திருத்தப் பணிகளுக்காக உக்ரேய்னுக்கு அனுப்பப்பட்டுள்ளதால், படையினர் விமானம் மூலம் பயணிப்பதில் தடை ஏற்பட்டது.

இவ்வாறு அனுப்பப்பட்ட விமானங்களில் இரண்டு புதுப்பிக்கப்பட்டும், உக்ரேயினில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக அந்த நாட்டுக்குச் சென்று அவற்றை இயக்கிப் பார்ப்பதற்கும் விமானிகளால் முடியாதுள்ளதாகவும் விமானப் படைத் தளபதி தெரிவித்தார்.

இந்த நிலைமை சீரடைந்ததும் இந்த வாரத்தினுள் அந்த விமானங்கள் இரண்டும் இலங்கைக்கு எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - இவற்றுக்கு மேலதிகமாக இரண்டு சி-130 ஹெக்கியூலிஸ் விமானங்கள் திருத்த வேலைகளுக்காக உக்ரேயினுக்கு அனுப்பப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# புலிகளின் குற்றச்சாட்டுக்கு முத்து சிவலிங்கம் மறுப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு எடுத்த தீர்மானம், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு இழைக்கப்பட்ட துரோகத்தனம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்த குற்றச்சாட்டைத் தாம் மறுப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

தொழிலாளர் காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்தது தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையகத் தமிழர்களின் நலன்களுக்காகவே தவிர, வேறு எந்தக் காரணத்துக்காகவும் அல்ல என்றும அவர் தெரிவித்தார்.

எமது கட்சியினூடாக விடுதலைப் புலிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டி இருந்தால், அந்த வேண்டுகோளை எமக்குச் சமர்ப்பிக்காது, இது போன்ற குற்றச்சாட்டுக்களைத் தொடுப்பது பொருத்தமான செயல் அல்ல.

வடக்கு - கிழக்கு மக்களைப் பற்றிப் புலிகள் சிந்திப்பது போலவே மலையக மக்களது தேவைகள் பற்றிச் சிந்திப்பது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார். (தே)

# கொழும்பு நகரின் ரகசியங்கள் கிளிநொச்சிக்குச் செல்கிறதாம்

(கொழும்பு)

கொழும்பில் ஊடுருவியுள்ள புலிகளின் உளவுப் பிரிவினர் மூலம் நடத்தப்படும் சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி சேவையினூடாக, கிளிநொச்சியிலுள்ள புலிகளின் உளவுப்பிரிவுத் தலைமையகத்தினால் கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ள முடிவித்ததாகச் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள தகவல்களின் படி இதில் 17 பேர் தொடர்புபட்டுள்ளனர். இவர்கள் ஜிந்துப்பிட்டி, கொட்டாஞ்சேனை, பேருவல, மருதானை, அளுத் மாவத்தை, புதிய சோனைதெரு ஆகிய இடங்களில் வசிக்கின்றனராம்.

இந்தச் சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி சேவைமூலம், புலிகளால் புகைப்படங்களைக் கூட எடுத்து அனுப்ப முடியும் என்றும், இது குறித்து பாதுகாப்புப் பிரிவினர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் வெளியாகிறது.

கேபிள் தொலைக்காட்சி சேவையை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தாலும், புலிகளுடன் தொடர்புடைய இந்தக் குழுவினர் சட்ட விதிகளைக் கவனத்தில் எடுக்காது, கேபிள் தொலைக்காட்சிச் சேவையை நடத்திவருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)



# ஐ.சி.சி. சிறந்த வீரராக ராகுல் ட்ராவிட் தெரிவு!



சர்வதேச கிரிக்கெட் சபை இந்த ஆண்டுக்கான சிறந்த வீர்கள் மற்றும் சிறந்த அணிக்கான விருதுகளை நேற்று முன்தினம் வழங்கியது.

லண்டனிலுள்ள அலெக்ஸ் சாண்ரா மாளிகையில் நடைபெற்ற இந்த கோலாகலமான நிகழ்வில் - இந்திய வீரர் ராகுல் ட்ராவிட், இரண்டு விருதுகளைக் கைப்பற்றினார். இவருக்கு இந்த ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் டெஸ்ட் வீரருக்கான விருதுகள் கிடைத்தன.

இங்கிலாந்து வீரர் அன்ரூ பிளின்ரொப்பிற்கு ஒரு நாள் போட்டிக்கான சிறந்த வீரர் விருது வழங்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான சிறந்த இளம் வீரராக இர்பான் பதானும் சிறந்த நடுவராக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சிமொன் ரௌபெனும் தெரிவாகியுள்ளனர்.

உலகின் தலைசிறந்த அணியாக நியூஸிலாந்து அணி தெரிவு செய்யப்பட்டது.



கிரிக்கெட்டில் ஒஸ்கார் விருது என அழைக்கப்படும் சோபர்ஸ் விருது இந்த வீரர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த வீரர்களைத் தெரிவு செய்வதற்கு ஐ.சி.சி. நியமித்த குழு விருதுக்குரியவர்களைத் தெரிவுசெய்தது. இந்த ஆண்டில் சிறப்பாக விளையாடிய பத்து வீரர்களில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் விருதுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த ஆண்டின் மிகச் சிறந்த வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரர் ஆகிய விருதுகளை வென்ற ட்ராவிட் 2003 - 2004 இல் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகள் உள்ளிட்ட 9 போட்டிகளில் 1,241 ஓட்டங்களைக் குவித்தார். இவரது ஓட்ட சராசரி 95.46 ஆகும்.

சிறந்த ஒரு நாள் போட்டி வீரராக இங்கிலாந்து அணி வீரர் அன்ரூ பிளின்ரொப் தெரிவு செய்யப்பட்டார். இவர் 12 போட்டிகளில் விளையாடி 551 ஓட்டங்களை எடுத்ததுடன் 12 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

மேலும் இந்த ஆண்டின் சிறந்த புதுமுக வீரராக இந்திய இளம் பந்துவீச்சாளர் இர்பான் பதான் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த இளம் பநதுவீச்சாளர்களுக்கான பட்டியலில் இந்திய வீரர் பதான், பாகிஸ்தான் வர்ர்கள் யாசீர் அகமது, உமர்குல், அவுஸ்ரேலிய வீரர் மைக்கல் கிளார்க் ஆகியோர் இருந்தனர். ஆனால் பதான் 100 வாக்குகள் பெற்று விருதைத் தட்டிச்சென்றார். பதான் 2003 - 2004 ஆண்டில் 5 டெஸ்ட் மற்றுமம 18 ஒருநாள் போட்டிகளில் வியைாடி 52 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# ஒரு நாள், டெஸ்ட் போட்டிக்கான சர்வதேச அணிகள் அறிவிப்பு!

(லண்டன்)

ஐ.சி.சியின் இந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி அணிகளில் இடம்பெறவுள்ள வீரர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு போட்டிகளிலும் திறமையாக விளையாடும் வீரர்களிலிருந்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிக்கான அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கான டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் -

மத்யூ ஹெய்டன், (அவுஸ்ரேலியா), ஹேர்சல் கிப்ஸ் (தென்னாபிரிக்கா), ரிக்கி பொண்டிங் (அவுஸ்ரேலியா), ராகுல் ராவிட்,(இந்தியா), பிறெய்ன் லாரா (மே.இந்தியத் தீவு) ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா), கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா), சமிந்தவாஸ்,( இலங்கை), ஷேர்வோன் (அவுஸ்ரேலியா), ஜிலெஸ்பி (அவுஸ்ரேலியா), ஹர்மிசன் (இங்கிலாந்து)

இவ்வாண்டுக்கான ஐ.சி.சி ஒருநாள் அணியில் இடம்பெறவுள்ள வீரர்கள் விபரம் வருமாறு:

கில்கிறிஸ்ட், ( அவுஸ்ரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), கிறிஸ் கைல் (மே.இந்திய தீவுகள்), ரிக்கி பொண்டிங் (அவுஸ்ரேலியா) பிறெய்ன் லாரா (மே.இ.தீவுகள்), வீரேந்தர் ஷேவாக் (இந்தியா), ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா), அன்ரூ பிளின்ரொப் (இங்கிலாந்து) ஷோன் பொலக் ( தென்னாபிரிக்கா), சமிந்தவாஸ் ( இலங்கை), ஜிலெஸ்பி (அவுஸரேலியா).

# ஷபீர் அகமதுவுக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியில் மகமூத்!

(கராச்சி)

ஐ.சி.சி. சம்பியன் ட்ரொபி போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து காயம் காரணமாக இளம் பந்து வீச்சாளர் ஷபீர் அகமட் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அசார் மகமூத் சேர்க்கப்பட்டுள்ளார்.

அண்மையில் முடிவடைந்த ஹொலண்ட் முத்தரப்புத் தொடர் மற்றும் ஆசியக் கோப்பை கிரிக்கட் தொடர்களில் சிறப்பாகப் பந்து வீசிய பாகிஸ்தான் அணியின் இளம் பந்து வீச்சாளர் ஷபீர் அகமட், கடந்த ஒரு வாரமாக முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிப்பட்டு வந்தார்.

ஐ.சி.சி. சம்பியன் டிரொபி போட்டிகளைக் கருத்தில் கொண்டு, பாகிஸ்தான் கிரிக்கட் சபை உடனடியாக அவரை தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தியது.

மருத்துவமனையில் அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவருடைய முழங்காலின் உட்பகுதியில் உள்ள சவ்வில் இலேசான விரிசல் ஏற்பட்டுள்ளது என்றும் அந்தக் காயத்திலிருநது அவர் குணமடைய குறைந்தது ஆறு வாரங்கள் பிடிக்கும் என்றும் அறிவித்து விட்டனர். எனவே, அவரால் சம்பியன் டிரொபி தொடரில் ஆடமுடியாது என்றும் டாக்டர்கள் திட்டவட்டமாக கூறிவிட்டனர்.

இதையடுத்து ஷபீர் அகமதுவிற்குப் பதிலாக பாகிஸ்தானின் மூத்த வீரர் - சகலதுறை ஆடக்காரர் அசார் மகமூத்தை தேர்வு செய்துள்ளனர் பாகிஸ்தான் கிரிக்கட் சபைத் தேர்வாளர்கள். அசார் மகமூத் தற்போது கவுண்டி போட்டிகளில் சுரே அணிக்காக ஆடிக்கொண்டிருக்கிறார் என்றும், அதனால் அவருக்கு இங்கிலாந்தின் தட்பவெப்பநிலைகள் பரிச்சயமாயிருக்கும் என்றும் தேர்வாள்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அணி வரும் 14 ஆம் திகதியன்று கென்ய அணியையும், வரும் 19 ஆம் திகதியன்று இந்திய அணியையும் எதிர்த்து முறையே எட்ஜ்பாஸ்டனிலும், ஓவலிலும் ஆடவுள்ளது.

# அமெரிக்க ஓபன் ரெனிஸ்; செரீனா அதிர்ச்சித் தோல்வி!

நியூயோர்க்கில் நடைபெற்றுவரும் அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியின் பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் சகநாட்டு வீராங்கனையான கேப்ரியாட்டியிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.



ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் 4 ஆவது சுற்றில் இங்கிலாந்து வீரர் டிம் ஹெமன் ஜேர்மனி வீர் நிக்கோலஸை எதிர்கொண்டார்.

இதில் நிக்கோலஸ் முதல் செட்டையும் ஹெமன் 2 ஆவது 3 ஆவது செட்டையும் கைப்பற்றினர். இதனால் ஆட்டம் மிக பரப்பரப்பானது.

4 ஆவது செட்டை நிக்காலஸ் கைப்பற்ற, கடைசி செட்டில் இருவரும் கடுமையாகப் போராடினார்கள். கடைசி செட்டில் ஹெமன் 3-0 என்று முன்னிலை பெற்றிருந்தபோது நிக்கோலஸ் காயமடைந்தார்.

அவர் தொடர்ந்து ஆட முடியாமல் போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால் ஹெமன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றொரு ஆட்டத்தில் உலகின் 4 ஆம் நிலை அவுஸ்ரேலிய வீரரான ஹெவிட் - ஸ்லோவாக்கிய வீர் கரோல் பெக்கை எதிர்கொண்டார். இதில் ஹெவிட் 6-4, 6-2, 6-2 என்ற நேர் செட்டில் எளிதாக கால் இறுதிக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான கால் இறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீராங்கனைகளான ஜெனிபர் கேப்ரியாட்டியும் செரீனா வில்லியம்ஸும் மோதினர். இதில் செரீனா 6-2, 4-6, 4-6 என்ற செட் கணக்கில் கேப்ரியாட்டியிடம் தோல்வியடைந்தார்.

## பதினாறு வயதுக்குட்பட்டோருக்கான

# யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணி முதலிடத்தை தட்டிச் சென்றது!

(தம்புள்ள)

தம்புள்ளவில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் 16 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்றது.

திருகோணமலை, மன்னார், வவுனியா மாவட்ட அணிகளை வென்ற யாழ்.மாவட்ட அணி - மட்டக்களப்பு மாவட்ட அணியுடனான போட்டியில் தோல்வியடைந்த போதிலும் புள்ளி அடிப்படையில் முதலாமிடத்தைப் பெற்றது.

இந்தப் போட்டிகளின் மூலம் யாழ். மாவட்ட அணியிலிருந்து எஸ்.லூட்சன், எஸ். ஜெனன்ராஜ், வி.விதுபாலா (சென்பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.வினோத் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஆர்.ரஜீவன், கே.ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி) ஆகிய ஆறு வீரர்களும் வடகிழக்கு மாகாண அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், 19 வயதுக்குட்பட்டோருக்கான மாவட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி நான்கு மாவட்டங்களையும் வென்று முதலாமிடத்தைப் பெற்றதன் மூலம் ஏழு வீரர்கள் வடகிழக்கு மாகாண அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் வடகிழக்கு மாகாண அணிக்கு முதன்முதலாக யாழ்.வீரர் வீ.ரஜீவ்குமார் (யாழ்.மத்திய கல்லூரி) தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் 16 வயதுக்குட்பட்ட வடகிழக்கு மாகாண அணிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 6 பேர் தெரிவுசெய்யப்பட்டமையால் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணியிலிருந்து ஒரு வீரர் வடக்கு - கிழக்கு மாகாண அணிக்கு தலைமை தாங்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




# தென்மராட்சி வலய மட்ட உதைபந்தாட்டத்தில் இன்று!

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு.

12 வயதுப் பிரிவில் -

கொடிகாமம் அ.த.க.மைதானத்தில் காலை 8.30 மணிக்கு - கச்சாய் அ.த.க. வித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் அ.த.க. பாடசாலையும் மோதவுள்ளன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தை எதிர்த்து டிறிபேக் கல்லூரியும், 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

14வயதுப் பிரிவில் -

கொடிகாமம் அ.த.க. வித்தியாலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தை எதிர்தது வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயமும் 10.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வீரசிங்கம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் அ.த.க. வித்தியாலயமும் மோதவுள்ளன.

வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் காலை 9.30 மணிக்கு நாவற்குழி மாகாவித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் 10.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் மோதவுள்ளன.

16 வயதுப் பிரிவில் -

கொடிகாமம் அ.த.க வித்தியாலயத்தில் காலை 10.45 மணிக்கு - கச்சாய் அ.த.க வித்தியாலயத்தை எதிர்த்து வீரசிங்கம் மகா வித்தியாலயமும் 11.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வரணி மகா வித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 10.45 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தை எதிர்த்து கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயமும் 11.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தை எதிர்த்து கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயமும் மோதவுள்ளன.


18வயதுப்பிரிவில் -

கொடிகாமம் அ.த.க வித்தியாலயத்தில் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தை எதிர்த்து வரணி மகாவித்தியாலயமும் 2.15 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கச்சாய் அ.த.கபாடசாலையை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் மோதவுள்ளன.

வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நாவற்குழி மகாவித்தியாலயத்தை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா வித்தியாலயமும் 2.15 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன.

# போராட்ட வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் தலைவரின் கரங்களை பலப்படுத்தவேண்டும்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை



(வடமராட்சி)

இந்தப் பிரதேசம் மீட்கப்பட்ட பின் இந்தப் பிரதேசத்திலுள்ள சங்கங்கள், சமாசங்கள், புனரமைப்புக் குழு ஆகியவற்றின் அபிவிருத்தியை மேம்படுத்த வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற் துறையினர் மேற்கொண்ட முயற்சிகள் போல், இந்தச் சங்கத்தையும் அபிவிருத்திசெய்து மேம்படுத்த இன்று புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்படுகிறது என,

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனைக் கட்டடத்தை திறந்து வைத்தபின் உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்தச் சங்கம் ஆரம்பித்து 100 நாட்களில் சிறப்பாக இயங்கி, பெரும் இலாபமீட்டியுள்ளதைப் பாராட்டி, இந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்காக இன்று கையளிக்கப்பட்ட ரூபா 2 இலட்சத்தை மூலதனமாகக் கொண்டு மேலும் சிறப்புற நடத்தலாம். சங்கமும் சங்க அங்கத்தவர்களும் சிறப்புற நடந்தால்தான் எமது போராட்ட இலக்கை அடைய முடியும்.

இதுவரை காலமும் பனை, பருத்தித்துறை சங்கங்களுடன் இணைந்திருந்த இந்தப் பிரதேச அங்கத்தவர்களுக்கு போதியளவு நன்மைகள் கிட்டவில்லை. தனித்து இயங்குவதன் மூலம் இந்தச் சங்கம் அங்கத்தவர்களுக்குப் பெருமளவு உதவிகளைச் செய்யமுடியும்.

இந்தப் பிரதேச போக்குவரத்துப் பாதைகள் சீராக இல்லை. கிரவல், களிமண் பாதைகள்தான் இங்கு காணப்படுகின்றன. பழுதடைந்திருக்கும் இந்தப் பாதைகளைப் பொது நிறுவனப் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளை அழைத்து வந்து காட்டுவதன் மூலம் இந்தப் பிரதேசத்தை முன்னேற்றமுடியும்.

எமது போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் வடமராட்சி கிழக்கில் எமது செயற்பாடுகள் பின்னிப் பிணைந்து காணப்பட்டது. அந்தளவுக்கு எமது செயற்பாட்டைச் செய்வதற்கு இந்தப் பிரதேச மக்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

அதேபோல் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி எமது போராட்ட வளர்ச்சிக்கு உதவி, எமது தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விழாவின் ஆரம்பத்தில் பொதுச்சுடரை வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (தென்னை பனை வளம்) எஸ். ஐயாத்துரை மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்கள் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் துணைப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைக்க சங்கத்தின் பெயர்ப்பலகையை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் திரைநீக்கம் செய்துவைத்தார். (21)



வல்லை மயானப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் எலும்புக்கூட்டை - பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி ந.கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியரட்ணம், யாழ்ப்பாண மாவட்ட வைத்திய அதிகாரி பாலசுப்பிரமணியம், நெல்லியடி பொலிஸ் அதிகாரிகள், நீதிமன்றப் பதிவாளர் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (12)

### திருத்தவேலைகள் முடிவடைந்தும்

## சேவையிலீடுபடமுடியாத நிலையில் நெடுந்தீவுக்கான குமுதினி படகு!

(நெடுந்தீவு)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு, ஊர்காவற்துறை இறங்குதுறையில் முழுமையாகத் திருத்தப்பட்டும் கடலில் இறக்கப்படமுடியாத நிலையிலுள்ளது.

இந்தப் படகு, பழுது காரணமாக பத்துமாதங்களாகச் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு, ஊர்காவற்துறை கரையில் நீண்டகாலமாக நிறுத்தப்பட்டு, பல இழுத்தடிப்புக்களின் பின்னர் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திருத்த வேலைகளுக்கான போதியளவு நிதியை வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கவில்லை. எனினும், படகின் திருத்த வேலைகள் முடிவடைந்தும் குமுதினி கரையேற்றப்பட்ட நிலையிலேயே உள்ளது.

ஆழம் குறைந்திருப்பதால், அதனை கடலில் இறக்குவதில் ஏற்பட்டுள்ள வசதியின்மையே குமுதினியை கடலில் மீள இறக்கி சேவையில் ஈடுபடுத்துவது தாமதம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடலில் இறக்குவதற்குப் பொருத்தமான மரத் தூண்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணமென, யாழ்ப்பாண நீரியல் வளத்துறை நிறைவேற்று பொறியியலாளர் தெரிவித்தார்.

இதற்கான உதவிகளை, விடுதலைப் புலிகளின் தீவகக் கோட்டத்துடன் தொடர்புகொண்டு கேட்டதையடுத்து, படகினை சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளில் கோட்டப் பொறுப்பாளர் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிதாக 5 இடங்களில் மிதிவெடியகற்றும் பணி!

யாழ். மாவட்டத்திலுள்ள புதிதாக 5 இடங்களில் மிதிவெடி அகற்றும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக, 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஐந்து பகுதிகளிலேயே, இவ்வாறு வெடிபொருள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, கற்கோவளத்தில் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினர்-அங்கு முழுமையான கடமைகளை நிறைவு செய்துள்ளனர். வெடிபொருள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளைப் பொதுமக்கள் பாவனைக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர்கள் வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### மருதங்கேணி கிராமிய வைத்திசாலைக்கு

## நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை; நோயாளிகள் பலத்த சிரமம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள மக்கள் கடந்த சில நாட்களாக வைத்திய உதவிகள் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த பல மாதங்களாக இயங்கிய மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் மருந்தகம், கடந்த சில நாட்களாக வைத்திய அதிகாரி இன்மையால் பூட்டப்பட்டிருக்கின்றது.

கடந்த வாரம் வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்கள் பதில் வைத்தியர் கடமையில் ஈடுபட்டிருந்த போதும், மற்றைய நாட்களில் எந்தவொரு பதில் வைத்திய அதிகாரியும் கடமைக்கு வருவதற்குரிய ஒழுங்குகளை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளாமையால் நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் சிரமமடைகின்றனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் மையப்பகுதியிலுள்ள இந்த மருந்தகத்துக்கு நிரந்தர வைத்திய அதிகாரி விடுமுறையில் செல்லும் காலங்களில் பதில் வைத்திய அதிகாரியொருவரை நியமிக்க ஏற்ற நடவடிக்கையை யாழ். சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

## மந்திகை வைத்தியசாலைக்கு முன் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை!

மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியில் எந்தவொரு வாகனமும் நிறுத்திவைக்கக்கூடாது என பருத்தித்துறை பிரதேசசபை உத்தரவிட்டுள்ளது.

இதுவரையில் இந்த வைத்தியசாலைக்கு முன்பாகவே வாடகைக்கு விடப்படும் ஓட்டோ, வான் போன்ற பல வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்திவைக்கப்படுவதால், வைத்தியசாலைச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், வாகன விபத்துக்கள் நடைபெறவும் ஏதுவாக அமைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே, எந்த வாகனமும் வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்திவைக்கக்கூடாது என, உடனடி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (14)

# சின்னஞ்சிறு செய்திகள்

### மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, திருவங்கேணி ஐங்கர விநாயகர் கோவில் (பனையடிப் பிள்ளையார்) புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் 8.57 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இடம்பெறும்.

பூர்வாங்க கிரியைகள் யாவும் இந்த மாதம் 6 ஆம் திகதிமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (24)

### திலீபன் நினைவுதினம் வடமராட்சியில் ஏற்பாடு

(பருத்தித்துறை)

தியாகி லெப். கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவுதினத்தை உணர்ச்சிபூர்வமாக சிறப்பாக அனுஷ்டிக்க, வடமராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்து வருகின்றனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை திலீபனின் விசேட அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதனிடையே யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களிடையே தேச விடுதலை அம்சங்களுடன் கூடிய போட்டிகளை நடத்தவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

### வினா - விடைப் போட்டிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையேயான வணிகக் கல்வி, விவசாய விஞ்ஞானம் ஆகிய தொழில்நுட்பப் பாடங்களுக்கான வினா - விடைப் போட்டி - எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பொறுப்பான ஆசிரியர்கள். தத்தம் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த மாணவர்களை அழைத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (31)

### மருதங்கேணியில் சவுக்கு மரங்கள் அழிப்பு!

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணிப் பகுதியில் தற்போது பெருமளவு சவுக்கு மரங்கள் அழிக்கப்படுகின்றன. விறகுத் தேவைக்காக பச்சை மரங்களைத் தறித்து அழிக்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

சைக்கிள்களில் வரும் வியாபாரிகளே இந்த அழிப்பு நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடுவதாகவும், இதனால் எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் சவுக்கு மரங்கள் முற்றாக அழியும் நிலை தோன்றுவதுடன், இயற்கை அழிவுகளும் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (கு)

### தென்மராட்சி விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள்!

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு-உணவு விவசாய நிறுவனத்தால், விதை நெல், உரம் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்த ஆண்டு, விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கே இந்த இலவச நெல், உரம் என்பன வழங்கப்படவுள்ளது. இதற்கென கைதடி கமநல நிலையத்தில் 119 பயனாளிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால், 400 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு தலா 2 புசல் விதை நெல், உரம் என்பன வழங்கப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன தெரிவித்தார். (25)

### வல்லிபுர கோவிலில் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று 'வைஷ்ணவ பக்தி' எனும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (14)

### வர்த்தக வங்கியின் ஆண்டுவிழா

(நெல்லியடி)

நெல்லியடியிலுள்ள வர்த்தக வங்கியின் முதலாம் ஆண்டு பூர்த்தி நிகழ்வுகள் வங்கி முகாமையாளர் தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்பொருட்டு வடமராட்சிப் பிரதேசமெங்கும் ஒலிபெருக்கி மூலம் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வர்த்தக வங்கியின் விசேட கணக்குகளின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

### தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன்,

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 20 ஆவது நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் சாரதா பரஞ்சோதி - பாட்டு, றோகினி அருளையா - வயலின், எம்.சிதம்பரநாதன் - மிருதங்கம், ரி.சண்முகசுந்தரம் - கெஞ்சிரா ஆகியோர் இணைந்து இசை நிகழ்ச்சியை நடத்துவர். (100)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ப.யதுராம்
முகவரி : நாகர் கோவில் மேற்கு, நாகர் கோவில்

இரண்டாவது அகவையில்



பெயர் : ப.கவேதிகா
முகவரி : நெடுந்தீவு



## பொருண்மியம்

# விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் பௌதீகச் சூழல்

விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் பௌதீகச் சூழலாக பின்வருவன காணப்படுகின்றன.

1) விவசாய நடவடிக்கைகளின் அடிப்படை மூலகம் மண்ணாகும். பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நைதரசன், பொஸ்பரஸ், சல்பர், பொட்டாசியம், மக்னீசியம், கல்சியம் முதலான கனியங்களை மண் கொண்டுள்ளது. இவை 'குறைவாகவுடைய வளமற்ற மண் விவசாயத்துக்கு ஏற்றதில்லை.

மண்ணின் வளம் இன்று இயற்கைப் பசளைகள், இரசாயன உரங்கள் மூலம் பேணப்படுகிறது. 25 மில்லி மீற்றர் தடிப்பான வளமான மண் உருவாக ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுகின்றது.


ஆனால், மனிதரின் நடவடிக்கையால் 200 மில்லி மீற்றர் தடிப்பான மண் ஒரு தலைமுறையில் வளமற்றுப் போகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்குத் தோட்ட மண் மிகவும் ஏற்றதாக விளங்குகின்றது. களிமண் - சில வகைப் பயிர்களுக்கு ஏற்றதாகவுள்ளது. மணல்மண் - வளம் குன்றியதாயினும் அதிக வளமாக்கி உபயோகத்தின் பின்னர் விவசாயத்துக்கு உகந்ததாகின்றது. மண் வகைகளுக்கும் ஏற்ப பயிர்வகைகளும் வேறுபடுகின்றன.

வண்டல்மண் - நெற்பயிர்ச்செய்கைக்கு உகந்தாகவுள்ளது. செம்மண் - தோட்டச் செய்கைக்கு உகந்தது.

2) விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற காரணிகளாக காலநிலை விளங்கி வருகின்றது. அவையாவன -

**நீர்** - பயிர்களின் வளர்ச்சிக்கு நீர் இன்றியமையாதது. தாவரங்களின் வேர்கள் மூலம் தமக்குத் தேவையான நீரை மண்ணிலிருந்து பெற்றுக்கொள்கின்றன. வரட்சி ஏற்பட்டால் பயிர்ச்செய்கை பாதிப்புறும். அதே போன்று வெள்ளப்பெருக்கு ஏற்படினும், பயிர்ச்செய்கை பாதிப்புற்று அழியும். பயிர்வகைகளுக்கு ஏற்ப நீரினளவும் மாறுபடும். பருவ மழையும், பருவ வரட்சியும் கொண்ட பருவக்காற்றுப் பிரதேசங்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்றனவாகவுள்ளன.




**வெப்பநிலை** - விதைகளின் முளைவிடுதலுக்கும், பயிர்களின் வளர்ச்சிக்கும் வெப்பநிலை அவசியமானது. பயிர்களுக்குரிய வெப்பநிலை பயிருக்குப் பயிர் வேறுபடும்.

**சூரிய ஒளி** - பயிர்களின் வளர்ச்சிக்கும், தானியங்கள், பழங்கள் முதலிய விளைவுகள் முற்றுவதற்கும் சூரிய ஒளி அவசியமாகின்றது.

**காற்று** - கடும் காற்றுக்கள் முற்றிய தானியப் பயிர்களைச் சரித்து, நாசமாக்கி விடுகின்றன. குளிர்காற்றுக்கள், வெப்பக் காற்றுக்கள் என்பன தேவையற்ற காலங்களில் வீசிப் பயிர்களைப் பாதித்துவிடுகின்றன.

**தரைத்தோற்றம்** - பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்ற தரைத்தோற்ற இயல்புகளில் உயரம் முக்கியமானது. சமநிலங்கள் பொதுவாகப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்தன. பிரதான தானியச் செய்கைகள் தாழ்நிலங்களிலேயே நடைபெற்று வருகின்றன.

## பீன்ஸ் ஏழைகளின் மாமிசம்



மனிதன் உண்ணும் மரக்கறிகளில் பீன்ஸ் மிகவும் புராதனமானது. இதனை லெக்யூம் என்ற பொதுப் பெயரின் கீழ் அழைக்கின்றார்கள்.

பீன்ஸ், அவரை, பட்டாணி எல்லாமே லெக்யூம் தான். காட்டில் அலைந்து திரிந்து, மிருகங்களை வேட்டையாடி உண்டு கொண்டிருந்த ஆதி மனிதன் - ஓரிடத்தில் தங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்த காலத்திலிருந்து பீன்ஸை உணவாகக் கொள்ளும் பழக்கம் இருந்திருக்கிறது.


தாய்லாந்தில் கி.மு.பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னரே இது உபயோகத்தில் இருந்ததை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். கி.மு. ஏழாவது நூற்றாண்டில் மெக்ஸிக்கோவில் பயிரிட்டிருக்கிறார்கள்.

இந்தப் பீன்ஸை, ஏழைகளின் மாமிசம் என்று அழைப்பார்கள். இதற்குக் காரணம் புரதச்சத்து அதிகம் இருப்பதே ஆகும். கொழுப்புச்சத்து மிகவும் குறைவு. முற்றாத பீன்ஸை சமைத்து உண்டால், விட்டமின் சி அதிகமாகக் கிடைக்கும். நார்ச்சத்தும் உள்ளது.

பீன்ஸில் நூற்றுக்கணக்கான வகைகள் உள்ளன. அவற்றில் முக்கியமான பீன்ஸ் வகைகளுள் - அவரை, கொத்தவரை, சோயா பீன்ஸ், டபிள் பீன்ஸ், பிளக் பீன்ஸ் எனப் பலவகைப்படும்.

இதனைப் பயிரிடுவதன் மூலம் புரதச் சத்து மிக்க மரக்கறியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

## கீரை வகை



# இயற்கை அளித்த கொடை

உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது கீரை. அதிலும் கவனிக்க வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றது. கீரையின் இலைகள் செழிப்பாக, அடர்த்தியாக இருக்கவேண்டும். தண்டு மளுக்கென்று உடைந்தால் இளங்கீரை.

மழைக்காலத்தில் கீரைகளில் பூச்சிகள் முட்டையிட்டுப் பெருகும் நோய்கள் விரைவில் பரவ வாய்ப்புண்டு. இதனால், கீரைகளைச் சுத்தம் செய்யும்போது, முதலில் வேர்ப் பரப்பை நீக்கவேண்டும். முக்கியமாக இலைகளின் பின்புறம் பார்க்கவேண்டும். சிறு பீடைகள் பாதுகாப்புக்காகக் கீரை இலைகளின் பின்புறம்தான் முட்டையிடும்.

எனவே, கீரைகளை நன்கு கழுவிய பின்பு, உப்பு நீரில் மீண்டும் கழுவவேண்டும். உப்பு நீர் ஒரு சிறந்த பூச்சிக் கொல்லி.

ஒவ்வொரு கீரையும் பொதுவான இரும்புச்சத்துடன் வேறு ஒரு உலோகச்சத்தையும் தனித் தனியாகக் கொண்டிருக்கும்.

எங்களுடைய வீட்டுத் தோட்டத்திலும், வேலியிலும் தானாகவே வளரும் தூதுவளை, சாரணை, குப்பைக்கீரை போன்ற மருத்துவ குணங்கொண்ட எத்தனையோ கீரை வகைகள் இயற்கை அளித்தகொடை. அவற்றைப் பாவிக்கும் முறை தெரிந்துகொண்டு பயன்படுத்தினால் நல்லது.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | நெல்லியடி | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 25/= | 30/= | 40/= | 25/= | 30/= | 40/= | 30/= |
| வெண்டிக்காய் | 35/= | 10/= | 25/= | 30/= | 15/= | 10/= | 30/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 60/= | 70/= | 80/= | 80/= | 80/= | 80/= |
| கத்தரிக்காய் | 40/= | 20/= | 30/= | 40/= | 20/= | 35/= | 30/= | 30/= |
| பாகற்காய் | 45/= | 30/= | 25/= | 40/= | 40/= | 30/= | 40/= | 20/= |
| கரட் | 60/= | 40/= | 40/= | 50/= | 40/= | 55/= | 60/= | 60/= |
| பீற்றூட் | 40/= | 15/= | 25/= | 30/= | 15/= | 20/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 50/= | 80/= | 50/= | 60/= | 100/= | 80/= | 100/= | 70/= |
| வெங்காயம் | 40/= | 30/= | 25/= | 30/= | 30/= | 35/= | 40/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 40/= | 30/= | 40/= | 40/= | 30/= | 40/= | 30/= |

## மாடுகளில் ஏற்படும் கால்வாய் நோய்கள்

மாடுகளுக்கிடையே பரவும் நோய்களில் கால்வாய் நோயும் ஒன்றாகும். இந்த நோய் ஏற்பட்ட மாடுகளின் வாயிலிருந்து நீர் வடிவதோடு கால்களில் காயங்கள் காணப்படும். இந்தநோய் ஏற்பட்ட மாடுகள் உணவு உண்பதில்லை. நடப்பதற்குச் சிரமப்படும்.

இந்தக் கால்வாய் நோயானது - ஒரு வைரஸினால் ஏற்படுகின்றது. வேறு நாடுகளிலிருந்து மிருகங்களை இறக்குமதி செய்யும்போது, இந்த வைரஸ் வந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. வருடத்தின் வரண்ட காலத்தில் இந்த நோய் நீரினாலும், மாடுகளைத் தூர இடங்களுக்குக் கொண்டு செல்லும்போதும் பரவவாய்ப்புண்டு.



குறிப்பாகக் கால்வாய் நோய் ஏற்பட்ட மாடு நீர் குடித்த இடத்தில் ஏனைய மாடுகள் நீர் அருந்துவதால் இந்த நோய் பரவும். இதனால், இந்த நோய் ஏற்பட்ட மாடுகளை ஏனைய மாடுகளிலிருந்து அந்நியப்படுத்த வேண்டும்.

மாடுகளை ஒரு இடத்திலிருந்து, பிறிதொரு இடத்துக்குக் கொண்டு செல்லும்போது, ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்கு இந்த நோய் பரவ இடமுண்டு. எனவே, கால்வாய் நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு நீர் கொடுக்கும்போது, அவதானமும், அவற்றைப் பிரயாணத்திலிருந்து தவிர்த்தலும் நல்லது. இவ்வாறு இந்த நோய் ஏற்பட்ட மாடுகளைத் தனிமைப்படுத்தும் பொழுது, நோய் பரவ வாய்ப்பில்லாமல் போகின்றது.

மாடுகளின் கால்வாய் நோயைத் தடுப்பதற்கான தடுப்பூசி ஒன்றுள்ளது. இது வழங்கப்பட்ட மாடுகளுக்கு நோய் பரவுவதில்லை. மேலும் மாடுகளை ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்குக் கொண்டு செல்லும்போது, இந்தத் தடுப்பூசியை வழங்கவேண்டும்.

இந்த நோய் ஏற்பட்ட மாடுகளின் பால் குறையும். கன்றுகள் உயிரிழக்க நேரிடும். இதனால், மாடுகளின் மூலம் பெறப்படும் வருமானம் குறைவடையும்.

இந்தக் கால்வாய் நோய், ஒவ்வொரு வருடமும் ஏற்படும் பிரச்சினையாகும். வருடத்துக்கு ஒரு தடவை தடுப்பூசியைப் போடுவதன் மூலம் எதிர்காலத்தில் எமது பிரதேசத்திலிருந்து இந்த நோயை நீக்கிவிட முடியும்.

இல்லாதுவிடின், ஒவ்வொரு வருடமும் இந்த நோயை மாடுகள் எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இது ஒரு தொற்று நோய். எனவே அவதானம் தேவை.

## சோயா அவரை

அண்மைக்காலத்தில் முக்கியம் பெறும் புதிய பயிராகச் சோயா அவரை விளங்குகின்றது. புரத உணவாக இது கருதப்படுகின்றது. சோயா, பால் சோயா, இறைச்சி, சோயா மா, சோயா எண்ணெய் எனப் பலவகை உணவாக இது பயன்படுத்தப்படுகின்றது.

இதனுடைய தாவரவியல் பெயர், 'க்லைசீன் மெக்ஸ்' ஆகும். இதன்மூலம் விவசாயிகள் பெரும் ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். சோயா அவரை மூலம பல பயன்பாடுகள் உள்ளமையால், இதற்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பும் அதிகமுள்ளது.

- சசி சந்திரகாசன்

# தொழில்மலர்



# அலுவலக முகாமையை ஒழுங்குபடுத்த அவசியமான கோவையிடல் முறை

அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவை, கடிதங்கள், பத்திரங்களை ஒழுங்கு முறையாக வைத்து வருவதன் மூலம், பல்வேறு அலுவலகப் பிரச்சினைகளைப் போக்கலாம். அலுவலகங்கள் நிறுவனங்களின் தீர்மானங்களை எடுக்கும் போது அல்லது நடைமுறைப்படுத்தும்போது பல்வேறு தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காகக் கடிதங்கள் ஆவணங்களை ஒழுங்கு முறையாகப் பேண வேண்டும்.

ஆகவே, அலுவலக முகாமையை ஒழுங்கு முறையாக மேற்கொள்வதற்கு செயற்றிறன் மிக்க கோவையிடல் முறை அவசியமாகும்.

கோவையிடல் என்பது ஆவணங்களை ஒழுங்கு முறையாகப் பேணுவதற்கான ஒரு செயற்பாடாகும். தேவையானபோது - விரைவாகவும், இலகுவாகவும் தகவல்களைப் பெறறுக் கொள்ளக் கூடிய வகையில் வைத்து வரப்படும் ஓர் ஒழுங்கு முறையான ஆவண நடவடிக்கை என்றும் கோவையிடலைக் கொள்ளலாம்.

கோவைகளைப் பல அலுவலகங்களில் கணினிகளில் பாதுகாத்து வருகின்றனர். எனினும், பிரதான ஆவணங்களை வேறாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை இன்றும் புறக்கணிப்பதற்கில்லை.

**கோவைகளைப் பின்வரும் முறைகளில் பகுதிப்படுத்தலாம்**

1. அகர வரிசை முறை
2. எண் ஒழுங்கு முறை
3. பிரதேச ஒழுங்கு முறை
4. கால நிரை முறை
5. அகர வரிசையுடன் ஒழுங்கு முறை
6. விடய ஒழுங்கு முறை

இவற்றை நிறுவனங்களின் தன்மை, அவை செயற்படும் முறை, அவை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, பிரயோகித்தல் வேண்டும்.

**கோவையிடல் முறையில் பின்வருவற்றை அவதானித்தல் வேண்டும்**

* நபர்கள், நிறுவனத்தின் தேவை, அதன் முக்கியத்துவம்
* தொழிற்பாடுகள்
* காலம், இடம், புவியியல் எல்லைப் பரப்பு
* உற்பத்திப்பொருள் பிரிவு அலகு

என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கோவையைப் பாதுகாத்து வரவேண்டும்.

**கோவையிடலில் பின்வரும் இயல்புகள் காணப்படல் வேண்டும்**

☆ இலகுவானதும், விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருத்தல்.

☆ சம்பந்தப்பட்ட ஊழியர் வேலைக்கு சமூகம் தராவிடின், இன்னுமொரு ஊழியர் கையாளப்படக் கூடியதாக இருத்தல்.

☆ நிறுவனத்துக்கு வெளியே உள்ளவர்கள் இலகுவாக தொடர்பு கொள்ளக் கூடியதாக இருத்தல்.

☆ ஒரு விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தக் கூடியதாக இருத்தல்.

**கோவையிடலின் போது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியவைகள்**

✤ ஒவ்வொரு ஊழியரும் நிறுவனத்தின் பொது விதிகளுக்கு அமைய கோவைகளைப் பராமரித்தல்.

✤ இயன்றவரை தேவையற்ற கோவைகளைப் பராமரித்தலைத் தவிர்த்தல்.

✤ கோவைகளுக்கான பட்டியலொன்றைத் தனது பொறுப்பிலும், பொது முகாமையாளர் அல்லது பிரதான ஊழியர் அல்லது தகுதியானவரின் பொறுப்பிலும் வைத்திருத்தல்.

✤ தனக்குப் பதிலாகக் கடமை புரியக் கூடிய ஒருவருக்கு கோவைகளின் விபரங்களை அறிந்திருக்க ஒழுங்குகளைச் செய்தல்.

✤ 3 மாதங்களுக்கு ஒருமுறை கோவைகளைச் சரி செய்தலும், தேவையற்ற கோவைகளை அகற்றுதலும்.

✤ கோவைகளை அகற்றும் பொழுது உரிய ஒழுங்கு முறைகளை மேற்கொள்ளல்.

✤ கோவைகளின் முக்கியத்துவத்தை அல்லது கடிதங்களின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு பட்டிகளை உபயோகித்தல்.

**தேவையற்ற கோவைகளை அழித்தல்**

இந்த நடவடிக்கையின்போது ஆவணங்களை பின்வருமாறு பிரித்து வைத்துக் கொள்ளலாம்.

* தின ஏட்டுக் குறிப்புகள் உ+ம் பில் புத்தகங்கள், ஆரம்ப பதிவுகள்.
* இரண்டாம் பதிவுக் குறிப்புகள் உ+ம் பேரேடுகள், உபபேரேடுகள்
* இறுதிப் பதிவுக் குறிப்புகள் உ+ம் இறுதிக் கணக்குகள், உறுதிகள், வருடாந்த அறிக்கைகள்.

இவற்றில் இறுதிப் பதிவு மற்றும் அறிக்கைகள் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டியவையாகும். முதலாம், இரண்டாம் பதிவுக் குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் அழிக்கப்பட வேண்டியவை.

**முறையான கோவையிடலால் ஏற்படக்கூடிய பொதுவான நன்மைகள்**

☞ இலகுவாகக் கையாள முடியும்.

☞ பாவனையாளர்கள் பொதுமக்களுக்கு இலகுவாகும்.

☞ நேரச் சிக்கனம்.

☞ விரயங்களைத் தவிர்த்தல்.

☞ பொதுவான துப்பரவு பேணப்படல்.

☞ வேலையில் ஈடுபடும் போது மனதுக்கும், அலுவலகப் பொது தோற்றத்துக்கும் மகிழ்ச்சி ஏற்படல்.

*

# குறைந்த மனித வளத்துடன் சிறந்த இசைச்சேவைக்கு - 'மிடி'

இந்த நாட்களில் நீங்கள் கேட்கின்ற அநேகமான இசை வடிவங்கள் "மிடி" (Midi-Musical instrument Digital interface) தொழில் நுட்பத்தின் படைப்புக்களே ஆகும்.

இவை கருவிகளின் இயற்கையான ஒலிகளின் மாதிரிகளைக் கொண்ட ஒலி மொடியூல்களை (Sound Modules) வெளியிலிருந்து அனுப்பப்படும் தரவுகளின் மூலம் கட்டுப்படுத்துவதால், நாம் விரும்பிய ஒலிகள் இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்க முடியும்.

பின்வருவன இருக்குமானால், உங்கள் வீட்டிலேயே ஓர் இசைக்கூடத்தை அமைக்க முடியும். கணினி (Computer) கீபோர்ட், ஓகன் (Keyboard - Organ), மிடி கேபிள் (Midi cable), மிடி (Midi) என்பனவாகும். ஓகன் அல்லது சின்திசைஸர் (Synthesizor) எனப்படும் குரல் உருவாக்கி (Tone Generator) மூலம் நாம் தரவுகளை உட்செலுத்த முடியும்.

நாம் இசைக் கோலங்களைப் பயன்படுத்தும் போது மிடி பொது நியமனத்தைப் (General midi Format) பயன்படுத்த வேண்டும். அதன்மூலமே ஓர் இடத்தில் உருவாக்கப்பட்ட இசைக் கோவையை இன்னோர் இடத்தில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

பொது நியமத்தைப் பயன்படுத்தாவிடின், இசைக்கருவிகளை அடையாளப்படுத்துகின்ற பட்ச் (Patch) இயக்கங்கள் மாறுபட்டு, அதனால் ஓர் இசைக்கருவி இன்னோர் இசைக்கருவியாக வாசிக்கப்படலாம்.

ஒவ்வொரு Midi Channel லும் வெவ்வேறு இசைக்கருவிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல சனல்கள் பல Track களில் ஒரே நேரத்தில் பதியப்படக் கூடிய சாத்தியத்தை மிடி சீக்குவன்ஸர் (midi Sequencer) அளிக்கின்றது. இது Split Channel multi recording என அழைக்கப்படுகின்றது. இதில் Track என்பது இசை பற்றிய தகவல்களின் பதிவுகளைப் பேணுகின்ற இடம்.



நாம் சாதாரண இசைக்கருவிகளைக் கொண்டு உருவாக்க முடியாத ஒலிகளை மிடி நுட்பத்தின்மூலம் உருவாக்க முடியும். எனினும், சில கீழைத்தேய ஒலி வடிவங்களைக் கையாள்வது கடினமானவே உள்ளது.

கலைஞனின் ஆக்க சிந்தனை சுதந்திரத்துக்கு வழி சமைப்பதுடன், சிறந்ததோர் இசைக் கோவையின் படைப்பை மிகக் குறைந்த மனித வளத்துடன் சாத்தியமாக்கியுள்ளது midi தொழில் நுட்பம்.

இசை ஆர்வலர்களே நீங்களும் தொழில் நுட்ப யுகத்தோடு சமாந்தரமாக பயணிக்க 'மிடி' நுட்பத்தை முயற்சித்துப் பாருங்கள்.

- எஸ்.ஜெயா -

# கண்ணாடி நார் இழைப்பொருட்கள் உற்பத்தி

உடையாததும், பழுதுபடாததுமான தன்மை கொண்டவை கண்ணாடி நார் இழையிலான உற்பத்திப் பொருட்கள். இவை மக்களால் பெரிதும் விரும்பப்படும். சாப்பாட்டு மேசை, கதிரை வகைகள், பூச்சாடிகள், கண்ணாடிபிறேம்கள், சமையலறை பாத்திரங்கள், தண்ணீர் தொட்டி, மின்சார மீற்றர் பெட்டி, சாதாரண தட்டு வகைகள் போன்ற பல பொருட்களைக் கண்ணாடி நார் இழை மூலம் உற்பத்தி செய்யலாம்.

இதற்குப் பயிற்சியும், அனுபவமும் அவசியம். ஒவ்வொரு வகையான பொருட்களைத் தயாரிப்பதற்கும், ஒவ்வொரு வகையான அச்சு உண்டு. இவ்வச்சுக்களைத் தயாரித்துக் கொள்ளலாம். துப்பரவு செய்யப்பட்ட அச்சில் ஜெல்கொட் என்னும் இரசாயனத்தைப் பூசி, ஒருமணி நேரம் காயவிட வேண்டும். பின்னர் நூல் இழைப்பாயை அச்சின் அளவுக் கேற்ப வெட்டி காயவிட்ட இரசாயனத்தின் மேல் ஒட்ட வேண்டும். றேசின், கரலஸ்ற் ஆகிய இரசாயனங்களை பிரமாணங்களுக்கேற்ப கலந்து, நூல் இழை மேல் பூசவேண்டும். குறைந்தது 2 மணிநேரம் காயவிட வேண்டும்.

இவையாவும் ஒன்று சேர்ந்து ஒட்டி காய்ந்து இறுகும். பின்னர் அச்சிலிருந்து உற்பத்திப் பொருட்களைக் கழற்ற வேண்டும். பொருளின் ஓரங்களை நேர்த்தியாகக் கத்தரித்தல் வேண்டும். இவ் வோரங்களுக்கு ஜெல்கொட் பூசி மெழுகினால் பளபளப்பாக்க வேண்டும். கதிரை, மேசைகளுக்கான அச்சை இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் செய்யலாம்.

தேவைப்படும் மூலப்பொருட்கள் - நூல் இழைப்பாய், கண்ணாடி நாரிழை, இரசாயனங்கள் - Resin, Celcot, Cat Alust [P.I.பைப்புக்கள், கம்பிகள்.

உபகரணங்கள் - 1/2 - 3 வரையான தூரிகைகள், சான்பேப்பர், அச்சுக்கள், கலவைக்கான பாத்திரங்கள்.

இருவர் அல்லது மூவர் இந்தத் தொழிலில் ஈடுபடலாம்.

முதலீட்டை அதிகரித்த பின்னர் மேலதிக தொழிலாளர்களை ஈடுபத்தி உற்பத்தியை அதிகரிக்கலாம்.

கண்ணாடி நாரிழைப் பொருட்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கும் ஒரு சிறந்த மாற்றீடு.

# தொழில் வெற்றிக்கு சில வழிகள்

☞ வெற்றிக்கு ஒரு காரணம் உழைப்பு. ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரமாவது உழைக்க வேண்டும்.

☞ வெற்றி என்பது ஒரு ஏணி போன்றது - அதனால் ஒவ்வொரு படியாக முன்னேற வேண்டும்.

☞ வாழ்க்கையின் பாதுகாப்புக் கருதி ஒரே இடத்தில் தேங்கி நின்று விடக்கூடாது.

☞ துணிந்து முடிவுகளை எடுக்கும் தைரியம் வேண்டும்.

☞ நீங்கள் சம்பாதிப்பதை விட அதிகம் உழைக்க வேண்டும்.

☞ தொழிலில் எதிர்கொள்ள வேண்டிய எந்த சிக்கல்களுக்காகவும் மனம்தளரக் கூடாது.

☞ மற்றவர்களையும் உங்களுக்காக உழைக்க வைக்கும் புத்திசாலித்தனம் வேண்டும்.

☞ வாய்ப்புக்களுக்காகக் காத்திருந்து, சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

☞ விழுவது எழுவதற்காகவே. எனவே விழுந்ததைப் பற்றி யோசிக்காமல் எழுவதைப் பற்றி மட்டும் யோசிக்க வேண்டும்.

☞ வெற்றிக்கு நேரம் அவசியம்.

☞ எதற்கும் கவலைப்படுவதை நிறுத்தி, நேர்மையாகச் சிந்திக்க வேண்டும்.

☞ சந்தோஷம் என்பது பணத்தினால் மட்டும் வருவதில்லை. அதனால் உலகின் ஒவ்வொரு விடயத்தையும் நேசியுங்கள்.

முல்லைத்தீவு, மாத்தளன் கடற்பகுதியில் நடத்தப்பட்ட

# மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து மாவட்ட செயலரிடம் மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

**கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மாத்தளன் கடற்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நான்கு கடற்தொழிலாளர் மீது கடற்படை மேற்கொண்ட மிலேச்சத்தமான தாக்குதலைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணியும், மகஜர் கையளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**முல்லைமாவட்ட கடற்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் சமாசத்தால் தயாரிக்கப்பட்ட தமது கோரிக்கை அடங்கிய மகஜரை, முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கையளிக்கப்பட்டது.**

**கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக கடற்படையினரின் தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடற்தொழிலையே நம்பி வாழும் மீனவர்களின் வாழ்வுக்கான ஜீவனோபாயம் கேள்விக்குறியாகியுள்ளது.

போர் நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பன தொடங்கி, இருவருடங்களைத்தாண்டியும், எமது இயல்புவாழ்வுக்கு இதுவரை வழி சமைக்கவில்லை. அண்மையில் நடைபெற்ற இருவேறு தாக்குதல்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கும், செய்தி ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தியதில் எதுவித் நடவடிக்கை மாற்றங்களும் கடற்பரப்பில் ஏற்பட்டதாக உணரமுடியவில்லை.

2004.07.21 புதன்கிழமையன்று கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த இரு மீனவர்கள் மீது, கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றது.

குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலை 3 மணியளவில் முல்லைத்தீவு வண்ணாங்குளத்தை சேர்ந்த கோ.பிரபாகரன் என்பவரும், சுமன் என்பவரும் மீன்பிடிப்பதற்காகப் படகில் சென்றிருந்தனர்.

இவர்களை வழிமறித்த கடற்படையினர், மீனவர் இருவரையும் மிரட்டியதோடு, சுமன் என்பவரை சேட்டில் பிடித்து இழுத்து டோறாப் படகில் ஏற்றிய பின்னர், பிரபாகரனை ஓடித் தப்புமாறு கூறியுள்ளனர்.

சுமனை விட்டுப் போவதற்குப் பிரபாகரன் மறுத்தபோது அவர்களது மீன்பிடிப்படகை டோறாவுடன் இணைத்துக்கட்டி, சிறிது தூரம் இழுத்துச்சென்றனர். பின்னர் சுமன் என்பவரை மோசமாகத் தாக்கி காலிலும் கையிலும் பிடித்துத் தூக்கி படகுக்குள் போட்டுவிட்டு விரட்டி விட்டனர்.

தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் மயக்கமடைந்த சுமன் என்பவரை முற்பகல் 10 மணியளவில் பிரபாகரன் கரைக்கு கொண்டுவந்து முல்லை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார். உளப்பாதிப்புக்குள்ளான இவர் இதுவரை கடலுக்குச் செல்ல முடியாதுள்ளது எனவும்,

2004.09.01 புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் முல்லைத்தவு அம்பலவன் பொக்கணைப பகுதிக் கடற்பரப்பில் மிகமோசமான தாக்குதலொன்று நடைபெற்றுள்ளது.

அம்பலவன் பொக்கணையிலிருந்து மீன்பிடிக்கச்சென்ற அந்தோனிப்பிள்ளை டானியல் என்பவரது படகினை கடற்படையினர் முற்றுகையிட்டுத் தாக்குதலுக்குள்ளாக்கினர். படகிலிருந்த நால்வரையும் கடலில் குதிக்குமாறு பணித்தனர். தமக்கு நீச்சல் தெரியாது என மீனவர்கள் அச்சம் தெரிவித்தபோது, படகை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டவேளை, மீனவர்கள் நால்வரும் தண்ணீரில் குதித்து பின்புறமாக அடித்தட்டில் பிடித்துத் தத்தளித்தனர். சிறிது நேரத்தின் பின் அவர்களைப் படகில் ஏறுமாறும், விரைந்து கரைக்குப் போகுமாறும் கூறி, கடற்படையினர் விரட்டியுள்ளனர். மயிரிழையில் உயிர் தப்பிய மீனவர்கள் சேதமடைந்த படகுடன் கரைசேர்ந்தனர்.

மேற்படி தாக்குதலின் பின்னர் கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கு மீனவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இருவேறு தாக்குதலோடு மட்டுமல்லாமல், மீனவர்களை விரட்டுவதும் தொடருவதால் மீனவ மக்கள் அணிதிரண்டு அரச அதிபர் பணிமனை முன்னதாக பேரணி நடத்தியுள்ளனர். அவர்களின் ஒருமித்த குரலாக, வேண்டுதலாக இந்த அறிக்கையைத் தங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இதன்மூலம் தங்களின் விரைவானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கையினை எமது மக்கள் நம்பிக்கையோடு எதிர் பார்க்கின்றனர். எமது மீனவ மக்களின் தொழில் சார் நலன்களையும் வாழ்வியலையும் மேம்படுத்துகின்ற குறிக்கோளினை முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் சங்கங்களும் உறுதிசெய்யும் முகமாக இந்தப் பகிரங்க அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றது என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## மருத்துவக் குழுவினால் இலவச சிகிச்சை

முல்லைத்தீவு கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில், வெளிநாட்டு மருத்துவர் குழு ஒன்று சிகிச்சைகளை வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த மருத்துவக் குழுவே இலவசமாக சிகிச்சைகளை வழங்கியுள்ளது.

இந்த இலவசச் சிகிச்சையின் மூலம் 160 பேர் பயனடைந்துள்ளனர்.

## நூல்கள், தளபாடங்கள் அன்பளிப்பு

கனடா வாழ் பூநகரி மக்களால் நூலக தளபாடங்கள், நூல்கள் என்பன பூநகரி மகாவித்தியாலய நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அன்பளிப்பு செய்யும் நிகழ்வு - பூநகரி மகா வித்தியாலய அதிபர் தில்லைநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சி.இராசநாயகம், கோட்டக்கல்விப் பணிப்பாளர், கடற் புலிகளின் பூநகரி அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இருநூல்கள் அறிமுகவிழா

எழுத்தாளர்களான ஆதித்தநிலா மற்றும் அமுதன் ஆகியோரின் இரு நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

ஆதித்தநிலாவின் எங்கள் மனக் கண்ணைத் திறவுங்கள்' என்ற நூலும், அமுதனின் 'முதற்பயணம்' ஆகிய இரு நூல்களுமே அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு ஞாயிறு மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் மூன்று மாடிக்கட்டடம் திறந்து வைப்பு

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டடம் ஒன்று நேற்று முன் தினம் காலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் குகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்புவிழாவில் - பொதுச் சுடரினை நிக்கொட் திட்டப்பணிப்பாளர் லங்காநேசன், மற்றும் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர் ஜெயாந்தன் ஏற்றிவைக்க, நிகொட் திட்டப்பணிப்பாளர் லங்காநேசன் மற்றும் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோர் நாடாவினை வெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (03)

# காவற்துறையினரால் இளைஞன் கைது

(தலைமன்னார்)

தலைமன்னார்ப் பகுதியில் இருந்து மன்னாருக்கு பேருந்து ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரிடம் நேற்று முன் தினம் மாலை 4.30 மணியளவில் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருள் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் தவல்கள் தெரிவிக்கின்றன.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் நிறை 4 1/2 கிலோ எனவும், அதன் சந்தைப் பெறுமதி 50 லட்சம் ரூபாவிற்கும் அதிகமானது என்றும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

## சுயதொழில் முயற்சி கடன் வழங்கல்

(சில்லாலை)

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையம் விவசாயிகளுக்கு மண்வெட்டி மற்றும் தெளிகருவி ஆகியவற்றையும், சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடனையும் வழங்கியுள்ளது. (21)

# வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

மாங்குளம் மற்றும் கனகராயன் குளம் ஆகிய பகுதிகளில் வீதி விபத்துக்களைத் தவிர்க்க விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வீதி விபத்துத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் - பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேசமயம் நேற்று கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் வீதி விபத்துத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், கண்காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட காவற்துறைக்கண்காணிப்பாளர் ரஞ்சித்குமார், ஆளுகைப் பகுதிப் பொறுப்பாளர் கலையரசன், மாங்குளப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அறிவழகன் ஆகியோர் வழங்கினர்.

# தற்போதைய வரட்சியால் மக்கள் பெரிதும் பாதிப்பு

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக - கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சி காரணமாக கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

தற்பொழுது நிலவும் வரட்சி காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் 5151 குடும்பங்களும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5944 குடும்பங்களும், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1336 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் வரட்சியினாலும், எதிர்பார்க்கப்பட்ட மழை கிடைக்காமையினாலும் பயிற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி விவசாயிகளுக்கு நிவாரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர் குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மாவீரர் குடும்பங்களுக்கு அமைக்கப்பட்ட வீடுகளில், ஐந்து வீடுகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட இந்த நிகழ்வில் - தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், கிளிநொச்சி மாவட்ட காப்பாகப் பொறுப்பாளர் முத்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் ருபெல்லா சின்னமுத்து நோய்த் தடுப்பு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாளையும், நாளை மறுதினமும் ருபெல்லா சின்னமுத்து நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

1983 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பிறந்தவர்களுக்கான தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

இந்தத் தடுப்பு மருந்தை தவறாது பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதார நிலையங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் போன்வற்றில் இந்தத் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது. (09)

# நீண்டகாலமாக புனரமைக்காத கொக்காவில் வீதியால் சிரமம்

கொக்காவில் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது. இந்த வீதியில் அமைந்துள்ள புத்துவெட்டுவான், ஐயங்கன்குளம், பழையமுறிகண்டி, தேறாங்கண்டல் ஆகிய கிராமங்களின் வீதியே மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது.

இந்தப் பகுதியில் வாழ்கின்ற 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இந்தக் கிராம மக்கள் மருத்துவ வசதிகளோ அல்லது சுகாதார வசதிகளோ பெறுவதற்காக நீண்ட தூரம் சென்று பெறவேண்டிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இன்மையால் கல்வியை கட்டியெழுப்பமுடியாத நிலை

**முல்லை வலய கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு**

முல்லைத்தீவு வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இன்மையால் ஆரம்பக் கல்வியை கட்டியெழுப்ப முடியாதநிலை உள்ளது என முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்ப்டி கல்வி வலயத்தில் தற்பொழுது 17 ஆங்கில ஆசிரியர்களே சேவையில் உள்ளனர் எனவும், 85 ஆங்கில ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாகவும், இதனால் ஆரம்பக் கல்வியை வளப்படுத்தப் பெரும் சிரமமாகவுள்ளது எனவும் தெரிவித்த அவர், பௌதீக வளங்கள் ஓரளவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனினும் கட்டடவளம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது எனவும் தெரிவித்தார்.

சகல பாடசாலைகளிலும் கட்டட வசதிகள் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு இருட்டுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சுப்பிரமணியம் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளை உதாரணமாகக் காட்டலாம் என அவர் மேலும் கூறினார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நீங்கான் வெகுலி நிறைஇலன் எஞ்ஞான்றும்*
*யாங்கனும் யார்க்கும் எளிது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு குமார் ரூபசிங்கவின் கருத்துக்கள்...

வடக்கு - கிழக்கு வாழ்மக்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமையை உடையவர்கள். எனவே, அதற்கான உரிமைகளை அவர்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியமேயாகும் என பொதுசமூகஅமைப்பின் தலைவர் குமார்ரூபசிங்க தெரிவித்துள்ளமையானது, இன்று பலரது கவனத்தை கவர்ந்தவிடயமாகியுள்ளது. இந்தக் கருத்துக் குறித்து சிந்திக்கும் வேளையில் - இந்தக்கருத்துக்குரிய நபர்குறித்த எண்ணங்களும் எழவே செய்கிறது. இப்போது இவரது பெயர் புதிதான - பெருமளவிற்கு பிரபல்யமில்லாத ஒன்றாக இருந்தாலும் ஒரு காலத்தில் பரபரப்பாக பேசப்பட்ட ஒன்றேயாகும்.

1970 களில் மத்திய பகுதியில் அப்போதய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மருமகனான அதாவது இன்றைய ஜனாதிபத சந்திரிகாவின் அக்கா சுனேத்ரா பண்டாரநாயக்காவின் கணவராக இன்னும் சற்று விரிவாக சொல்வதானால் அப்போதய சிங்கள இளைஞர்களின் கவர்ச்சிமிகு தலைவராக - பலவேகய என அக காலத்தில் பிரபல்யமான இடதுசாரி அமைப்பின் ஸ்தாபகத் தலைவராக நன்கு அறிமுகமான நபரே இந்த குமார்ரூபசிங்க ஆவார்.

1971 இல் ஜே.வி.பியினரின் முதல் கிளர்ச்சி நடவடிக்கையானது இராணுவரீதியில் ஒடுக்கப்பட்டபின்னர், சிங்கள இளைஞர்களை தம்வசமாக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் வியூகமாகவே பலவேகய என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இடதுசாரி புரட்சிகரஅரசியல் சித்தாந்தத்தை பேசிக்கொண்டு அரங்கிற்கு வந்த குமார்ரூபசிங்கவின் தற்காலிக வரவின் கவர்ச்சியான வேகம் சிங்கள இளைஞர்களிடையே பலவேகய அமைப்பை பரவலாக வேரூன்றசெய்தபோதும், பிரசார எழுச்சிக்கு சமாந்தரமாக அரசியற் செயற்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம் கொள்ளாத நிலையில் 1977 ஆட்சிமாற்றத்துடன் முகவரியற்றதாக மாறிவிட்டது.

அத்துடன், சுனேந்திராவுக்கும் - அவருக்குமான மணமுறிவும் சேரகுமார் ரூபசிங்கா எங்கு சென்றார் என்று தேடுமளவிற்கு காணாமற்போய்விட்ட நபரானார்.

பின்னர் மீண்டும் ஜெயசிக்குறு நடவடிக்கை தவிரம் கொண்டிருந்த காலத்தில் அலேர்ற் இன்ரநஷனல் என்ற சர்வதேச அமைப்பின் முக்கியஸ்தராக - சமாதான முயற்சி ஒன்றில் ஈடுபடும் நபராக அவரது மீள்வருகை அமைந்தது.

அப்போது மீண்டும் சமாதானம் தொடர்பாக அவர் பல அறிக்கைகள், ஆலோசனைகள், நேர்காணல்கள் போன்றவற்றை வெளியிடும் பல்வேறு தரப்பினரை அது தொடர்பாக சந்தித்தும் ஒரு சமாதான அனுசரணையாளராக தன்னைப் பிரபல்யப்படுத்த முன்றார்.

சமாதானமுன்னெடுப்பின் அவசியம் தொடர்பான கருத்தரங்குகள், பொதுச் சந்திப்புக்கள், நூல் வெளியீடுகள் போன்றவற்றில் தீவிரமாக செயற்பட்டார் பழையகுடும்ப உறவுகளுக்கப்பால் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் இது தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொண்டதாகவும் செய்திகள் வந்தன.

ஆனால், அவரது முயற்சிகள் எந்த விதமான சாதகமான சூழலையும் சமாதானத்தின் பேரால் தோற்றுவிக்கத் தவறிவிட்டது. போர் உத்வேகமாக - குமார் ரூபசிங்க மறக்கப்பட்ட ஒருவரானார். அதன் பின்னர் ஐ.தே.முன்னணி அரசின் சமாதான முன்னெடுப்புக்களின்போது அவ்வப்போது இவரது சமாதான முயற்சிகள் தொடர்பான கருத்துக்கள் வெளிப்படையாகிக்கொண்டே இருந்தது.

இப்போது மீண்டும் மேற்குறித்த கருத்துடன் அரசியல் அரங்கிற்கு வந்துள்ள குமார் ரூபசிங்க, இம்முறை உருப்படியான சில கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மக்கள் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமையை உடையவர்களாக்க - அதற்கு முதற்கட்டமாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக பேசப்படவேண்டியது அவசியமாகும். அதற்குரிய வழிவகைகளை, புலிகளின் யோசனைகள் கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ள கருத்தானது பொருத்தமான சமயத்தில் கூறப்பட்டதொன்றேயாகும்.

இருபத்தைந்து வருடகால யுத்தத்தின் பிரதிபலிப்பாக இடைக்கால நிர்வாக அதிகாரசபை யோசனைகளை வர்ணித்துள்ள குமார் ரூபசிங்க வரலாற்றில் முதல் தடவையாக புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


இன்றைய சூழலில் ரூபசிங்க முன்வைத்துள்ள இந்தக் கருத்துக்கள் எத்தகைய தாக்கத்தை சிங்கள மக்களிடையேயும், அரசியல் வாதிகளிடமும் ஏற்படுத்தும் என்று கூறமுடியாது.

பேரினவாத சமாதான விரோத சக்திகள் இக்கருத்துக்களுடன் ஒருபோதுமே உடன்படப்போவதில்லை என்பதும் நிஜம்.

எனினும் கருத்தியல் ரீதியில் வரலாற்று நிகழ்வுகளை மதிப்பீடு செய்து, சமகால அரசியல் தளத்தில் நின்று காலத்தின் தேவையை தெளிவுபடுத்தியுள்ள ரூபசிங்கவின் இக்கருத்துக்களை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

சமாதான முயற்சிகளில் தனிப்பட்டமுறையிலோ, தான் சாந்த அமைப்பு ரீதியிலோ வெறும் கருத்துக்களை முன்வைக்கும் ஒருவராக மட்டுமே இனம் காட்டும் குமார் ரூபசிங்கவின் கடந்த கால நடவடிக்கைகளுக்கு அப்பால் அவரின் சமகால கருத்து வெளிப்பாடுகள் இன்றைய தேவையை வலியுறுத்துவதாகவே உள்ளது.

# நாடும் நடப்பும்




# தமிழர்கள் தமது விடுதலையை தாமே போராடிப் பெற வேண்டும்

## - எழுச்சிப் பேரவை நிகழ்வில் சிறில்

(வடமராட்சி)

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை மதித்து அமைதி வழியில் தமிழரின் இனப்பிரச்சினையை சிங்களப் பேரினவாதிகள தீர்த்து வைப்பார்கள் என்று நம்பமுடியுமா? இல்லவே இல்லை இது எமது மக்களின் வரலாற்றுப் பட்டறிவாகும். தமிழர்கள் தமது விடுதலையை தாமே போராடிப் பெறவேண்டும். எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் எமது உரிமையை சிங்கள ஆட்சியாளர்கள் சும்மா கொடுக்கமாட்டார்கள். போராடி எடுத்தல் என்ற செய்கை தமிழினத்தின் இராணுவ அரசியல் பலத்திலேயே தங்கியுள்ளது. அந்தப் பலம்தான் எமக்கு நிரந்தர நிம்மதியான விடுதலையைப் பெற்றுத்தரவல்லது. அந்த பலத்தின்பால் மக்களை கொதிநிலையில் வைத்திருக்கவேண்டியது மக்களின் உயர் கட்டுமானமாகிய தேசிய எழுச்சிப் பேரவையின் கடமையாகும். அந்தக் கடமையை புரிகின்ற நீங்கள் மக்கள் மத்தியில் பெறுமதிமிக்கவர்கள் பெருமைக் குரியவர்கள். இது உங்களது தேசிய கடமையாகும். ஏனென்றால் தமிழீழ மக்களின் அரசியல் வேணவாவை நிறைவேற்ற உழைக்கும் எங்கள் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் அனைத்து தமிழீழ மக்களை ஒன்றிணைக்கின்றமையமே தேசிய எழுச்சிப் பேரவையாகும்.

இவ்வாறு வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட செயலாளர் சூ.சிறில் தெரிவித்தார்.

மாவட்ட பொருளாளர் க.சிவராசா உரையாற்றுகையில், தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உதயமாகிய தேசிய எழுச்சிப் பேரவையானது முதலில் தேசியத்துக்கும், தேசத்துக்கும் தனது சேவையை முன்னிலைப்படுத்த வேண்டும். விடுதலைதான் எமக்கு வேண்டும். விடுதலையின் பின்பு அபிவிருத்தி தானே எம்மை நாடி தேடிவரும். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டுமென்றார்.

நிகழ்வின் பொதுச்சுடரை பிரதேச உறுப்பினர்களாகிய இ.செவ்வந்திநாதன், அ.தர்மலிங்கம், அ.கிருஷ்ணசிவம், து.சத்தியசீலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரர் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை மாவீரர்கள் கப்டன் லீமா, அருணா, ஆகியோரின் தந்தை செல்லையா இராசேந்திரன் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தார். வரவேற்புரையை அ.ம.செபஸ்ரியன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. பத்திநாதர் அடிகளாரும் மாவட்ட பொருளாளர் க.சிவராசாவும் நிகழ்த்தினர். மேலும் இந்த நிகழ்வில் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, மாவட்ட இணைப்பாளர் பிரபா ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் பிரதேச செயலாளர் குமாரின் நன்றியுரையுடன் சங்கமம் முடிவுற்றது.

# நீர்ப் திட்டத்தின் நிதியுதவியுடன் எழுதுநர்களுக்கு பயிற்சிநெறி

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களைச் சேர்ந்த எழுதுநர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கென நீர்ப் திட்டத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டச் செயலகத்தால் நடாத்தப்பட்ட பயிற்சிநெறியின் இறுதிக்கட்ட பயிற்சிநெறி கடந்த 4,5 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இதேவேளை, இதுவரைக்கும் யாழ்.மாவட்ட பிரதேச செயலக எழுதுநர்களுக்கு கடந்த பயிற்சிப் பட்டறையுடன் 3 கட்டங்களாக பயிற்சிநெறிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகள் தட்டெழுத்தாளர்கள், கணக்குப் பதிவுனர்கள் போன்றோருக்கும் இந்த மாதத்தில் பயிற்சிகளை வழங்குவதற்கென அலுவலர்கள் தொடர்பான விபரங்களை பிரதேச செயலகம் ஊடாக திரட்டும் நடவடிக்கையில் யாழ். மாவட்ட செயலகத்தினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

# ஏப்ரல் மாத நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை

ஏப்ரல் மாதத்துக்கான நிவாரணம் வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் யாழ்.செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதத்துக்கான உலர் உணவு நிவாரணம் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும், அதற்கு ஆயத்த நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.செயலகத்தினர் தெரிவித்தனர்.

நிவாரணம் வழங்கும் திகதிகளின் விபரம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இடைவிலகிய மாணவர்களை கற்றலில் ஈடுபடவைக்கத் திட்டம்

பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவைக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் துரிதமாக நடைபெற்று வருகிறது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்கள், போரழிவுகள், இடப்பெயர்வுகள் காரணமாக ஏற்பட்ட வறுமையால் தமது பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் அதிகளவிலான சிறார்கள் இடைநடுவில் விலகியுள்ளனர். இவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் திட்டமே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இவர்கள் பாடசாலையைவிட்டு விலக வேண்டிய காரணத்தைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்தல் அவர்களின் கல்விமேம்பாடுகளுக்கு உதவுதல், பின் தங்கிய மாணவர்களுக்கான விசேட வகுப்புக்களை நடாத்துதல் போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இடைவிலகிய மாணவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இந்தத் திட்டமாகும். இத்துரித அமுலாக்கல் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சிறுவர் பாதுகாப்புநிதியம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்தியுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டம் கல்வித்தரம் உயர்வதற்கு வழிகோலலாக அமையுமெனவும் இந்தத் திட்டத்திற்கு வேறு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிபுரிய முன்வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(14)

# முருகன் ஆலய முகப்பு மண்டபம் தீயினால் எரிந்து முற்றாக நாசம்

மருதங்கேணி முருகன் ஆலய முகப்பு மண்டபம் தீயினால் எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமடைந்த இந்த ஆலயம் 1999 ஆம் ஆண்டு முற்றாகப் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது மீண்டும் முற்றாக அழிக்கப்பட்ட இந்த ஆலயம், மீளக்குடியமர்ந்த பின்பு அந்தக் கிராம மக்களால் சுற்றாடல் துப்பரவு செய்யப்பட்டு தடிகள் கிடுகுகளினால் முன் முகப்பு மண்டபக் கொட்டில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றுவந்தன.

கடந்த சில தினங்களுக்குமுன் ஆலய வளவினுள் நின்ற பனை மரத்திலிருந்த குளவிக் கூட்டைக் கலைப்பதற்காக மூட்டிய தீ கடும் காற்றுக் காரணமாகக் கோயில் முன்முகப்பு மண்டப கொட்டகைக்கும் பரவியதையடுத்து கொட்டகை முற்றாக எரிந்து சாம்பலானது.

(21)



வெளிநாட்டிலுள்ள எனது கணவருடன்
என்னால் பேசமுடிந்தது - செலான் வங்கிக்கு நன்றி



செலான் வங்கியில் வெஸ்டன் யூனியன் ஊடாக இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பணம் பெறும் ஒவ்வொரு தடவையும் ஐடிடி தொலைபேசி அட்டை ஒன்று (கையிருப்பில் இருக்கும் வரை மட்டும்) இலவசம்!

எந்த நாடாக இருந்தாலும் ஒருசில நிமிடங்களில் வெஸ்டன் யூனியன் மூலம் செலான் வங்கியூடாக பணம் உங்கள் கைகளில்!

பணப்பரிமாற்றலுக்கு பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும் அதிதுரிதமானதுமான வழி வெஸ்டர்ன் யூனியன்.

ஹொட்லைன்: 2452666

WESTERN UNION
பணப் பரிமாற்றல்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமை அலுவலகம்: செலிங்கோ செலான் டவர்ஸ்,
இல. 90, காலி வீதி, கொழும்பு 3
தொ.பே: 2452666, 4701000 ஃபக்ஸ்: 2456456
ஈமெயில்: info@seylan.lk வெப் சைட்: www.eseylan.com

WESTERN UNION பணப் பரிமாற்றல்

செலான் வங்கி

## வெஸ்ரன் யூனியன் – உலகளாவிய ரீதியில் பணத்தை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான அதிசிறந்த வழி

வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு பணத்தை அனுப்புவதற்கும், பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும், அதிதுரிதமானதுமான வழி வெஸ்ரன் யூனியன். இலங்கையில் பன்முக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பாரிய நிறுவனங்களில் ஒன்றான செலிங்கோ குறுப்பில் அங்கத்துவம் வகிக்கும் செலான் வங்கி, 1993 ஆம் ஆண்டிலிருந்து வெஸ்ரன் யூனியனுடன் இணைந்து அதன் பணப் பரிமாற்றல் சேவையைச் செய்து வருகிறது. செலான் வங்கியின் 108 கிளைகளில் இச்சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் வாழும், அல்லது வேலை செய்துவரும் இலங்கையர்கள் இலங்கையிலுள்ள தங்கள் அன்புக்குரிய வர்களுக்கு விரும்பி பணம் அனுப்பும் ஊடகம் வெஸ்ரன் யூனியனாகும். பணம் கையளிக்கப்பட்டு ஒருசில நிமிடங் களில் அது உங்கள் கைக்கு கிடைத்துவிடும். (அபெக்ஸ் நிறுவனம் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென ஒழுங்கு செய்த சிறந்த சேவைகளுக்கான விருது வழங்கல் வைபவத்தில் வெஸ்ரன் யூனியன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளது).

### நம்பிக்கை

ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வெஸ்ரன் யூனியன் மூலம் தங்கள் குடும்பங்களுக்கிடையே பணப்பரிமாற்றல் செய்கிறார்கள். ஒவ்வொரு பரிமாற்றலும் எமது உலக தரத்திலான பாதுகாப்பு முறை மூலம் பாதுகாக்கப்படுகின்றது. நீங்கள் அனுப்பும் பணம் குறிப்பிட்ட நபருக்கு விரைவாகவும், பாதுகாப்பாகவும் வழங்கப்பட்டது என்பதை வெஸ்ரன் யூனியன் உங்களுக்கு உறுதிப்படுத்தும்.

### விரைவு

நீங்கள் பணத்தை அனுப்பிய சில நிமிடங்களிலேயே அது உரியவர்களுக்குக் கிடைத்துவிடும். இதற்காக வெஸ்டர்ன் யூனியன் நவீன மின்னியல் தொழில் நுட்பத்தையும் 190க்கும் அதிகமான நாடுகளில் உலகளாவிய ரீதியில் கணினித் தொடரமைப்பையும் பயன்படுத்துகிறது.

### வசதி

வெஸ்ரன் யூனியன் முகவர் நிலையங்கள் உலகெங்கும் உங்களுக்கு வசதியான இடங்களான அஞ்சல் அலுவலகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள், சிறப்புச் சந்தைகள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றிலும் ஏனைய பல இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. 90,000க்கும் அதிகமான முகவர் நிலையங்கள் வெஸ்ரன் யூனியனை உலகில் மிகப்பெரிய பணப்பரிமாற்ற மையமாக விளங்கச் செய்கின்றன.

### வடபகுதியில் பணம்பெற இலகுவழிகள்

வடபகுதியில் பரந்த அளவில் செலான் வங்கி வலையமைப்பு இயங்குவதால், வெஸ்ரன் யூனியன் மூலம் இவற்றில் ஒன்றில் நீங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடக்கிலும் ஏரிஎம் காட் வசதிகள் இருப்பதால் ஏரிஎம் மெஷின்கள் மூலம் 24 மணி நேரத்தில் எந்நேரமும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

287. யா/கோ/ 9100 திருமதி. நாகரத்தினம் பொன்னம்பலம்
288. யா/கோ/ 9102 திரு. குமாரசாமி நவரத்தினசாமி
289. யா/கோ/ 9120 திரு. குமாரசாமி நவரத்தினசாமி
290. யா/கோ/ 9131 திரு. இலகுப்பிள்ளை கனகரத்தினம்
291. யா/கோ/ 9161 திருமதி. சோதிமலர் அரியநாயகம்
292. யா/கோ/ 9197 திரு. வயிரமுத்து ஐயாத்துரை
293. யா/கோ/ 9218 திரு. கந்தையா யோகரத்தினம்
294. யா/கோ/ 9240 திரு. ஆழ்வான் இளையவன்
295. யா/கோ/ 9300 திருமதி. ஜோயீஸ் இராசமாணிக்கம் நவரத்தினம்
296. யா/கோ/ 9331 திருமதி. வள்ளிப்பிள்ளை பொன்னையா
297. யா/கோ/ 9339 திருமதி. ஆச்சிப்பிள்ளை சண்முகலிங்கம்
298. யா/கோ/ 9362 திருமதி. சின்னம்மா செல்லத்துரை
299. யா/கோ/ 9396 திரு. பொன்னம்பலம் கனகரத்தினம்
300. யா/கோ/ 9482 திருமதி. தங்கம்மா கதிரவேலு
301. யா/கோ/ 9516 செல்வி. இராசமலர் பாலசிங்கம்
302. யா/கோ/ 9549 செல்வி. சிவசுகிர்தமலர் சிவசங்கரநாதன்
303. யா/கோ/ 9569 திரு. சின்னப்பு மயில்வாகனம்
304. யா/கோ/ 9595 திருமதி. தங்கச்சிப்பிள்ளை ஆசை
305. யா/கோ/ 9608 திரு. கந்தையா சின்னத்துரை
306. யா/கோ/ 9617 திரு. பாட்டாப்பிள்ளை இராசையா
307. யா/கோ/ 9674 திருமதி. திரவியம் கந்தசாமி
308. யா/கோ/ 9739 திரு. வைரமுத்து பொன்னுச்சாமி
309. யா/கோ/ 9841 திருமதி. சிவபாக்கியம் ஏகாம்பரநாதன்
310. யா/கோ/ 9855 திரு. கனகன் இராசரத்தினம்
311. யா/கோ/ 9893 திருமதி. சிவக்கொழுந்து பொன்னையா
312. யா/கோ/ 9911 திரு. முருகேசு துரைசிங்கம்
313. யா/கோ/ 9945 திருமதி. கமலாதேவி மகேந்திரன்
314. யா/கோ/ 9967 திரு. செல்லன் பண்டாரி
315. யா/கோ/ 10014 திருமதி. சரஸ்வதி நடராசா
316. யா/கோ/ 10102 திரு. இளையதம்பி கனகசபாபதி
317. யா/கோ/ 10115 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
318. யா/கோ/ 10159 திருமதி. சுஜாதா சிவமூர்த்தி
319. யா/கோ/ 10206 திருமதி. அருந்தவராணி குணநாயகம்
320. யா/கோ/ 10298 திரு. வயித்திலிங்கம் முத்தையா
321. யா/கோ/ 10331 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்
322. யா/கோ/ 10388 திருமதி. சிவக்கொழுந்து ஆறுமுகம்
323. யா/கோ/ 10397 திரு. மூத்தாம்பி சின்னத்துரை
324. யா/கோ/ 10398 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
325. யா/கோ/ 10447 திரு. நாகலிங்கம் பொன்னுத்துரை

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/உ/ 62 திருமதி. பாரததேவி அம்பலவாணர்
2. யா/உ/ 104 திரு. தம்பு சரவணமுத்து
3. யா/உ/ 137 திரு. சின்னத்தம்பி ஆறுமுகசாமி
4. யா/உ/ 151 திரு. ஆறுமுகம் பொன்னையா
5. யா/உ/ 221 திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம்
6. யா/உ/ 249 திரு. இராமலிங்கம் சர்வானந்தன்
7. யா/உ/ 268 திரு. இளையதம்பி செல்லத்துரை
8. யா/உ/ 269 திரு. சூசைப்பிள்ளை அன்ரனிதாஸ்
9. யா/உ/ 289 திரு. கணவதிப்பிள்ளை மாணிக்கம்
10. யா/உ/ 345 திரு. சரவணைமுத்து சுப்பிரமணியம்
11. யா/உ/ 351 திரு. தம்பையா வல்லிபுரம்
12. யா/உ/ 354 திரு. செல்லப்பாஅல்பேட் பாலசிங்கம்
13. யா/உ/ 407 திரு. கந்தன் சின்னத்தம்பி
14. யா/உ/ 469 திருமதி. ஆச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை
15. யா/உ/ 477 திரு. சிதம்பரநாதர் பொன்னம்பலம்
16. யா/உ/ 495 திரு. செல்லத்துரை சண்முகானந்தன்
17. யா/உ/ 554 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
18. யா/உ/ 562 திரு. கணபதிப்பிள்ளை நாகமணி
19. யா/உ/ 563 திரு. சின்னத்தம்பி நவரத்தினம்
20. யா/உ/ 581 திரு. கந்தையா சிவஞானம்
21. யா/உ/ 606 திரு. குமாரு ஆறுமுகம்
22. யா/உ/ 626 திரு. செல்லப்பா கனகலிங்கம்
23. யா/உ/ 643 திரு. சபாபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
24. யா/உ/ 648 திரு. பெரியதம்பி கந்தையா
25. யா/உ/ 691 திரு. மார்க்கண்டு நவரத்தினம்
26. யா/உ/ 698 திரு. கணேசு பாக்கியநாதன்
27. யா/உ/ 714 திருமதி. இரத்தினமா கணபதிப்பிள்ளை
28. யா/உ/ 721 திரு. வல்லிபுரம் இராசதுரை
29. யா/உ/ 738 திரு. வேலாயுதர் சின்னத்தம்பி
30. யா/உ/ 786 திரு. வல்லிபுரம் சுப்பையா
31. யா/உ/ 874 திரு. நன்னித்தம்பி கந்தையா
32. யா/உ/ 928 திருமதி. இரதிமதி செல்வரத்தினம்
33. யா/உ/ 976 திரு. நல்லதம்பி தாமோதரம்பிள்ளை
34. யா/உ/ 1007 திருமதி. லோகேஸ்வரி கதிரமலை
35. யா/உ/ 1041 திரு. செல்லையா றிச்சேட் இராசதுரை
36. யா/உ/ 1118 திரு. செல்லையா ஆனந்தகுமாரதாஸ்
37. யா/உ/ 1176 திரு. நன்னியர் வேலுப்பிள்ளை
38. யா/உ/ 1193 திரு. மூத்ததம்பி கந்தசாமி
39. யா/உ/ 1239 திருமதி. டெய்சி அருளம்மா துரைரத்தினம்
40. யா/உ/ 1263 திரு. ஐயாத்துரை பஞ்சலிங்கம்
41. யா/உ/ 1342 திரு. சுப்பிரமணியம் சிவரத்தினம்
42. யா/உ/ 1347 திரு. கனகசபை செல்லத்துரை
43. யா/உ/ 1374 திருமதி. அன்னமேரி ஸ்ரோனர் தம்பிமுத்து
44. யா/உ/ 1389 திரு. நாகலிங்கம் கந்தையா
45. யா/உ/ 1463 திரு. செல்லப்பா இரத்தினம்
46. யா/உ/ 1524 செல்வி. சுபத்திராதேவி நடராசா
47. யா/உ/ 1550 திரு. கதிர்காமர் வயிரமுத்து
48. யா/உ/ 1563 திரு. மாணிக்கத்தியாகராசா ஆனந்தர்
49. யா/உ/ 1567 திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
50. யா/உ/ 1576 திரு. கார்த்திகேசு ஐயாத்துரை
51. யா/உ/ 1586 திரு. மயில்வாகனம் கந்தசாமி
52. யா/உ/ 1624 திரு. கந்தர் பொன்னுத்துரை
53. யா/உ/ 1666 திரு. அருணாசலம் சதானந்தம்
54. யா/உ/ 1700 திருமதி. அகிலேஸ்வரி செல்லத்துரை
55. யா/உ/ 1713 திரு. பூதப்பிள்ளை இளையதம்பி மகேஸ்வரன்
56. யா/உ/ 1721 திரு. முருகுப்பிள்ளை கணேசபிள்ளை
57. யா/உ/ 1722 திரு. துரையப்பா குமாரசாமி
58. யா/உ/ 1765 திரு. குமாரு இரத்தினம்
59. யா/உ/ 1767 திருமதி. இராசமுத்து தில்லையம்பலம்
60. யா/உ/ 1772 திரு. கந்தையா சோமசுந்தரம்
61. யா/உ/ 1798 திருமதி. சின்னம்மா ஆறுமுகம்
62. யா/உ/ 1815 திரு. வெள்ளையர் தம்பு
63. யா/உ/ 1869 திரு. இளையதம்பி குமாரசுவாமி
64. யா/உ/ 1901 திரு. சின்னத்தம்பி மாரிமுத்து
65. யா/உ/ 1921 திரு. செல்லத்துரை நவரத்தினம்
66. யா/உ/ 1966 திருமதி. இராசாம்பாள் குழந்தைவேலு
67. யா/உ/ 2082 திரு. அழகக்கோன் பாலசிங்கம் வல்லிபுரம்
68. யா/உ/ 2092 திரு. சுப்பையா ஏகாம்பரம்
69. யா/உ/ 2237 திரு. இளையதம்பி வைத்திலிங்கம்
70. யா/உ/ 2255 திரு. முருகேசு ஞானப்பிரகாசம்
71. யா/உ/ 2257 திரு. முருகேசு கந்தப்பசேகரம்
72. யா/உ/ 2258 திரு. மாரிமுத்து கார்த்திகேசு
73. யா/உ/ 2431 திரு. நாகமணி இரத்தினம்
74. யா/உ/ 2446 திரு. நல்லதம்பி சீனித்தம்பி
75. யா/உ/ 2551 திரு. ஆறுமுகம் இராசா
76. யா/உ/ 2563 திரு. சொக்கலிங்கம் தியாகராசா
77. யா/உ/ 2582 திருமதி. சிவபாக்கியம் சின்னத்துரை
78. யா/உ/ 2583 திரு. வல்லிபுரம் சுப்பையா
79. யா/உ/ 2587 திரு. சண்முகம் கணேசு
80. யா/உ/ 2608 திருமதி. கயிலேஸ்வரி வேலாயுதபிள்ளை
81. யா/உ/ 2614 செல்வி. கமலாதேவி காசிநாதன்
82. யா/உ/ 2643 திரு. மாரிமுத்து கணபதிப்பிள்ளை
83. யா/உ/ 2712 திரு. கதிர்காமு இராசதுரை
84. யா/உ/ 2732 திரு. தம்பிப்பிள்ளை தம்பிஐயா
85. யா/உ/ 2768 திரு. கந்தையா நவரட்ணம்
86. யா/உ/ 2808 திரு. தம்பிஐயா இராமநாதன்
87. யா/உ/ 2811 செல்வி. ஜெகதாம்பிகை நல்லையா
88. யா/உ/ 2861 திரு. செல்லப்பா எட்வேட் ராஜசிங்கம்
89. யா/உ/ 2888 திரு. கந்தையா இயேசுரத்தினம்
90. யா/உ/ 2899 திரு. கந்தையா அமரக்கோன்
91. யா/உ/ 3009 திரு. கணபதி சீனி
92. யா/உ/ 3034 திருமதி. அழகம்மா பொன்னம்பலம்
93. யா/உ/ 3047 திரு. கந்தையா சண்முகநாதன்
94. யா/உ/ 3059 திரு. யோன்சின்னட்டியர் சாமுவேல்
95. யா/உ/ 3070 திரு. சுப்பையா சின்னத்துரை
96. யா/உ/ 3072 திரு. சிதம்பரப்பிள்ளை தம்பு கந்தையா
97. யா/உ/ 3073 திரு. இளையதம்பி கந்தையா
98. யா/உ/ 3077 திருமதி. பேபி கணேசலிங்கம்
99. யா/உ/ 3157 திரு. சுப்பையா இராசா
100. யா/உ/ 3158 திரு. இளையதம்பி வல்லிபுரம்
101. யா/உ/ 3183 திரு. தம்பு பேரம்பலம்
102. யா/உ/ 3195 திருமதி. இராசமணி இராசலிங்கம்
103. யா/உ/ 3219 திரு. சரவணை மகாலிங்கம்
104. யா/உ/ 3224 திரு. அரியகுட்டி சண்முகநாதன்
105. யா/உ/ 3238 திரு. நடராசா சத்தியசீலன்
106. யா/உ/ 3245 திரு. கந்தையா சண்முகம்
107. யா/உ/ 3314 திருமதி. இராசகுணமணி இராசதுரை
108. யா/உ/ 3411 திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம்
109. யா/உ/ 3414 திரு. வயித்திலிங்கம் சதாசிவம்
110. யா/உ/ 3466 திருமதி. வசந்தராணி ஞானப்பிரகாசம்
111. யா/உ/ 3519 திரு. கனகசபை சுப்பிரமணியம்
112. யா/உ/ 3521 திரு. தம்பு சின்னத்துரை
113. யா/உ/ 3545 திரு. கணபதிப்பிள்ளை ஶ்ரீதரன்
114. யா/உ/ 3599 திரு. பொன்னையா ஐயாத்துரை
115. யா/உ/ 3600 திருமதி. செல்வராணி குமாரவேலு
116. யா/உ/ 3633 திரு. சங்கரப்பிள்ளை இராமநாதன்
117. யா/உ/ 3689 திரு. கதிரேசு சாந்தகுமார்
118. யா/உ/ 3733 திரு. செல்வமாணிக்கம் குலேந்திரம்
119. யா/உ/ 3785 திரு. துரையப்பா பாலசுப்பிரமணியம்
120. யா/உ/3805 திரு. வயித்திலிங்கம் - சங்கரப்பிள்ளை
121. யா/உ/ 3923 திரு. கிருஷ்ணபிள்ளை கணேசலிங்கம்
122. யா/உ/ 4005 திரு. மரியாம்பிள்ளை தாவீதுராஜா
123. யா/உ/ 4058 திரு. சின்னத்தம்பி தங்கராசா
124. யா/உ/ 4073 திரு. முருகுப்பிள்ளை கனகசபை
125. யா/உ/ 4100 திரு. சுப்பிரமணியம் குமாரசிங்கம்
126. யா/உ/ 4222 திரு. நாகமுத்து தம்பிராசா
127. யா/உ/ 4224 திரு. சின்னத்துரை திருவைகுந்தநாதன்
128. யா/உ/ 4244 திரு. சீரங்கம் பாலசிங்கம்
129. யா/உ/ 4247 திரு. குழந்தையன் சங்கரப்பிள்ளை
130. யா/உ/ 4251 திருமதி. புனிதவதி கணேசமூர்த்தி
131. யா/உ/ 4327 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
132. யா/உ/ 4329 திரு. சரவணமுத்து கனகசுந்தரம்
133. யா/உ/ 4472 திருமதி. செல்லம்மா தம்பிஐயா
134. யா/உ/ 4550 திரு. வைரவப்பிள்ளை சிவகுமாரன்
135. யா/உ/ 4583 திரு. கந்தையா செல்லத்துரை
136. யா/உ/ 4586 திருமதி. தவமலர் தணிகாசலம்
137. யா/உ/ 4614 திரு. செல்லத்துரை இரத்தினசபாபதி
138. யா/உ/ 4615 திரு. நாகேந்திரம் சந்திரகாந்தன்
139. யா/உ/ 4628 திருமதி. சத்தியபாமா சிவகுமார்
140. யா/உ/ 4724 திரு. சீனிக்குட்டி பரமானந்தம்
141. யா/உ/ 4734 திருமதி. இராசமலர் நவரட்ணம்
142. யா/உ/ 4809 திரு. நாராயணன் செல்லத்துரை
143. யா/உ/ 4824 திருமதி. அருட்சோதி சீவரத்தினம்
144. யா/உ/ 4847 திருமதி. மனோன்மணி ஞானமுத்து
145. யா/உ/ 4903 திரு. கனகசபை கார்த்திகேசு
146. யா/உ/ 4904 திரு. வயித்திலிங்கம் இந்திரன்
147. யா/உ/ 4911 திரு. சடையன் அப்புத்துரை
148. யா/உ/ 4970 திரு. இரத்தினம் குமாரதாசன்
149. யா/உ/ 5015 திரு. சின்னையா மயில்வாகனம்
150. யா/உ/ 5095 திரு. வீரசிங்கம் ரவீந்திரன்
151. யா/உ/ 5111 திரு. கந்தையா சோமநாதன்
152. யா/உ/ 5121 திரு. முத்துத்தம்பி இராசரத்தினம்
153. யா/உ/ 5123 திரு. சபாபதி ஆனந்தர்
154. யா/உ/ 5144 திருமதி. பதஞ்சலி சிவபாக்கியம்
155. யா/உ/ 5146 திரு. வினாசித்தம்பி ஐயாத்துரை
156. யா/உ/ 5176 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தையா
157. யா/உ/ 5217 திருமதி. சின்னத்துரை கனகம்மா
158. யா/உ/ 5218 திரு. சிவக்கொழுந்து இராசநாயகம்
159. யா/உ/ 5254 திருமதி. சிவபாக்கியம் பாலு
160. யா/உ/ 5278 திருமதி. அமிர்தம்மா நவரத்தினம்
161. யா/உ/ 5313 திரு. சின்னப்பு கந்தையா
162. யா/உ/ 5317 திருமதி. பொன்னம்மா இரத்தினம்
163. யா/உ/ 5355 திரு. இளையதம்பி தயாளன்
164. யா/உ/ 5386 திரு. எள்ளுப்போலை அப்புத்துரை
165. யா/உ/ 5401 திருமதி. சின்னம்மா சின்னத்துரை
166. யா/உ/ 5416 திரு. சீனி சபாபதி
167. யா/உ/ 5459 திருமதி. வில்வரத்தினம் தம்பிப்பிள்ளை
168. யா/உ/ 5554 திரு. சேகரம்பிள்ளை தில்லைநாதன்
169. யா/உ/ 5597 திரு. முருகேசுகந்தையா எமிலியானஸ்பிள்ளை
170. யா/உ/ 5605 திரு. சிவப்பிரகாசம் கந்தசாமி
171. யா/உ/ 5622 திருமதி. திலகவதி சண்முகநாதன்
172. யா/உ/ 5677 திருமதி. சிவமலர் சின்னையா
173. யா/உ/ 5679 திரு. கார்த்திகேசு தம்பிராசா
174. யா/உ/ 5699 திருமதி. பராசத்தி கனகசபை
175. யா/உ/ 5729 திருமதி. அருளம்மா சூசைப்பிள்ளை
176. யா/உ/ 5752 திரு. அம்பலவி இராமலிங்கம்
177. யா/உ/ 5771 செல்வி. செபமணி பீற்றர்
178. யா/உ/ 5791 செல்வி. சேளிசாந்தினி ஹேஸ்டிங்ஸ்
179. யா/உ/ 5796 திருமதி. புவனேசராணி சின்னப்பு
180. யா/உ/ 5810 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி
181. யா/உ/ 5820 திரு. வைத்திலிங்கம் கதிர்காமநாதன்
182. யா/உ/ 5844 திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு
183. யா/உ/ 5849 திரு. முருகர் துரையப்பா
184. யா/உ/ 5887 திருமதி. டொறதி தங்கரத்தினம் நவரட்ணம்
185. யா/உ/ 5913 திரு. சின்னப்பா செல்லையா
186. யா/உ/ 5933 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்
187. யா/உ/ 5945 திருமதி. சதாரூபி பாலசிங்கம்
188. யா/உ/ 5999 திருமதி. லூமினா யேசுதாசன்
189. யா/உ/ 6000 திருமதி. பிலோமினா ஜெனமியாஸ்
190. யா/உ/ 6011 திருமதி. விக்கினேஸ்வரி லோகநாதன்
191. யா/உ/ 6012 திரு. சிவப்பிரகாசம் ஜெயக்குமார்
192. யா/உ/ 6119 திரு. செல்லத்துரை அருளம்பலம்
193. யா/உ/ 6122 திரு. பெரியண்ணன் தெய்வேந்திரன்
194. யா/உ/ 6187 திருமதி. தனலட்சுமி குலசிங்கம்
195. யா/உ/ 6293 திருமதி. தவமணி செல்லத்துரை
196. யா/உ/ 6298 திருமதி. அலிஸ் தவமணி செல்வநாயகம் ஜோன் சமரன்
197. யா/உ/ 6312 திரு. நிற்சிங்கம் லோகநாதன்
198. யா/உ/ 6323 திருமதி. மல்லிகாதேவி செல்வவேல்
199. யா/உ/ 6334 திரு. கந்தையா தர்மலிங்கம்
200. யா/உ/ 6339 திருமதி. இரஞ்சிதமலர் தில்லையம்பலம்
201. யா/உ/ 6375 திருமதி. நமசிவாயம் தனலட்சுமி
202. யா/உ/ 6416 திரு. கனகசபை இராசரத்தினம்
203. யா/உ/ 6448 திருமதி. அன்னலட்சுமி நவரத்தினம்
204. யா/உ/ 6493 திருமதி. செல்லம்மா தம்பிராசா
205. யா/உ/ 6602 திரு. இராமபிள்ளை சுப்பையா
206. யா/உ/ 6662 செல்வி. கவிதா மாணிக்கராசா
207. யா/உ/ 6667 திரு. கந்தையா சின்னத்துரை
208. யா/உ/ 6670 திரு. முருகேசு சண்முகநாதன்
209. யா/உ/ 6720 திரு. காசியர் இளையதம்பி
210. யா/உ/ 6733 திரு. பொன்னுத்துரை ஜெகநாதன்
211. யா/உ/ 6769 திரு. சின்னட்டியார் சீனி
212. யா/உ/ 6795 திரு. விஸ்வலிங்கம் சிவசுப்ரமணியம்
213. யா/உ/ 6798 திருமதி. நேசமலர் சிதம்பரநாதன்
214. யா/உ/ 6832 திரு. கந்தையா கந்தசாமி
215. யா/உ/ 6886 திரு. குமாரு கந்தையா
216. யா/உ/ 6947 திரு. யோக்கின் யோசெப்
217. யா/உ/ 6958 திரு. முத்தர் கந்தையா
218. யா/உ/ 6960 திரு. தம்பாப்பிள்ளை தம்பிராசா
219. யா/உ/ 7003 திரு. இனையதம்பி நன்னித்தம்பி
220. யா/உ/ 7105 திருமதி. செல்லம்மா வீரசிங்கம்
221. யா/உ/ 7137 திருமதி. பூமலர் நடராசா
222. யா/உ/ 7185 திரு. பென்சமின் அரசரத்தினம் மான்

## மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/மா/ 90 திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்
2. யா/மா/ 105 திருமதி. இராஜேஸ்வரி இராசரத்தினம்
3. யா/மா/ 172 திரு. சிவக்கொழுந்து இராசேந்திரன்
4. யா/மா/ 177 திரு. சின்னத்தம்பி மருதலிங்கம்
5. யா/மா/ 223 திரு. பசுபதி சுந்தரலிங்கம்
6. யா/மா/ 251 திரு. கந்தையா இராசதுரை
7. யா/மா/ 270 திரு. விசாகமுத்து பொன்னம்பலம்
8. யா/மா/ 346 திரு. இராசகுலசூரியர் கணபதிப்பிள்ளை
9. யா/மா/ 348 திரு. நகுலேஸ்வரன் குலஞானவதி
10. யா/மா/ 396 திருமதி. அன்னலட்சுமி கனகரத்தினம்
11. யா/மா/ 420 திரு. குட்டித்தம்பி கார்த்திகேசு
12. யா/மா/ 422 திரு. சுப்பையா கதிர்காமத்தம்பி
13. யா/மா/ 435 திருமதி. மகிழ்மலர் இராசேந்திரம்
14. யா/மா/ 601 திரு. கதிரவேலு சுப்ரமணியர்
15. யா/மா/ 607 திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
16. யா/மா/ 616 திரு. கந்தர் சரவணமுத்து
17. யா/மா/ 629 திரு. சின்னப்பு விஸ்வலிங்கம்
18. யா/மா/ 742 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
19. யா/மா/ 755 திரு. செல்லப்பா ஜோசெப் இளையதம்பி

(மிகுதி நாளை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு!

## அளவெட்டியில் சம்பவம்

வீட்டு வளவினுள் இருந்த கிணற்றில் குளிக்கச்சென்ற சிறுவன் மூன்று மணிநேரத்தின் பின்னர் கிணற்றுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று அளவெட்டி தெற்கு குரு வளவு என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரத்தினசிங்கம் சுரேஸ் (வயது 9) என்ற சிறுவனே கிணற்றில் தவறி வீழந்து உயிரிழுந்தவராவார்.

தனது ஆறு வயது சகோதரியுடன் சிறுவன் குளிப்பதற்காகக் கிணற்றுக்குச் சென்றார்.

கிணற்றுக்குச் சமீபமாக சகோதரியை விளையாடவிட்டு குளித்துக் கொண்டிருந்தபோது சிறுவன் தவறி கிணற்றினுள் வீழ்ந்தார்.

வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள கடை ஒன்றுக்குச் சென்றுவிட்டு திரும்பிய தாயார் இருவரையும் தேடியபோது கிணற்றடியில் சிறுமி விளையாடிக்கொண்டிருந்தார். சகோதரனைக் காணவில்லை எனத் தேடியபோது நீண்ட நேரத்தின் பின் கிணற்றுள் சடலம் மிதந்தது.

சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன், சிறுவனின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

# இரு காவல்துறையினர் மூதூர் பொலிஸாரால் கைது

திருகோணமலை மூதூர் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குச் சென்ற இரு தமிழீழ காவல்துறையினரை பொலிஸார் கைதுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

மூதூர் சம்பூர் காவல்பணிமனையைச் சேர்ந்த சித்திரவேல் உதயராஜ் (வயது -25), சித்திரவேல் உதயகுமார் (வயது - 21) ஆகிய இருவருமே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் நேற்றுக் காலை மல்லிகைத் தீவிற்கு விசாரணைக்காக சென்றிருந்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்ததாகத் தெரிவித்து இவர்கள் சேருவெல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ் இரு காவல்துறை உறுப்பினர்களும் இன்று மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (4,10)

### கூட்டுப்படை...

தயா சந்தகிரியை நியமிப்பதற்கு இராணுவ தரப்பில் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் அதற்கு இந்த நியமனம் வழங்கப்பட்டிருப்பது இராணுவ உயர் மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் கடற்படைத்தளபதி ஒருவர் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டமை இதுவே முதற்தடவையெனத் தெரியவருகிறது. (01)

### சமாதானப்...

இலங்கைக்கு அமெரிக்க அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் தீர்வுக்காக சாதகமான இணக்கப்பாட்டிற்கு வரும் வரை எமது வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்க முடியாது எனத் தெரிவித்தார்.

### புலிகளின் முகாம்...

தாக்குதல் நடத்தவந்த இருவர் புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்டதுடன், ஏனையோர் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

தப்பிச்சென்ற ஆயுதக்குழுவினர் அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'மக்' நிறுவன ஊழியர்களைப் பயமுறுத்தி அவர்களின் உதவியுடன் இறந்தவர்களின் சடலங்கள் மற்றும் காயமடைந்தவர்களை தூக்கிச்சென்றனர்.

காயமுற்ற நிலையில் தூக்கிச் செல்லப்பட்ட நகுலன் என்ற கருணாவின் சகா பின்னர் உயிரிழந்ததாக 'மக்' கண்ணிவெடி அகற்றும் குழுவைச்சோந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

தம்பிட்டியவில் உள்ள இராணுவ முகாமுக்குச் சென்ற பின்னரே தம்மைவிடுவித்ததாக மக் நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை புலிகள் முகாம் மீது கருணா குழுவினர் சுற்றிவளைத்து தாக்கியபோது மூவர் கொல்லப்பட்டதாகவும் ஐவர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் -

இந்தத் தாக்குதலை இராணுவ கொமாண்டோக்களே முன்நின்று நடத்தியதாக தெளிவாகவே அறிய முடிகிறது. இது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இது ஒரு மோசமான நிலவரமாகும். இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் கௌசல்யன் மேலும் தெரிவித்தார்.

### மட்டு. புல்லுமலை...

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் கோப தமதை பெரேரா தெரிவிக்கையில்- தம்பிட்டியப் பகுதி இராணுவ முகாமிற்கு தம்மீது தாக்குதல் நடத்தியோர் தப்பித்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. அங்கு அதிரடிப்படை முகாம் ஒன்று இருப்பது உண்மையே. என்ன நடந்தது என்பது குறித்து இன்னும் அறியவில்லை.

பொலிஸாரிடம் இருந்து இது குறித்து எமக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. எனவே இது குறித்து எதுவும் கூறமுடியாது. வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தினரதும், விடுதலைப் புலிகளினதும் காவல் நிலையங்கள் மிகவும் அருகிலேயே அமைந்துள்ளன. எனினும் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடக்கும் பிரச்சினைகள் பற்றி எமக்கு எதுவும் தெரியவருவதில்லை என்றார்.

# மட்டக்களப்பு நகரப்பகுதியில் குண்டு கண்டு பிடித்து மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சன நெருக்கடிமிக்க வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நேரக் கணிப்புக் குண்டு ஒன்று இராணுவத்தினரின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு - திருமலை வீதியில் உள்ள கடை ஒன்றில் மணற்சாக்குகளுக்குப் பின்னால் பெட்டி ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இக்குண்டு காணப்பட்டது.

நேற்று அதிகாலை வீதிச் சுத்திகரிப்புப் பணிக்குச் சென்ற தொழிலாளி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட வெடிகுண்டு அடங்கிய பெட்டி தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார், இராணுவத்தினரின் வெடிகுண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினரை அழைத்து இக் குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இக்குண்டை செயலிழக்கச் செய்வதற்காக மட்டக்களப்பு திருமலை வீதியூடான போக்குவரத்து இரு மணித்தியாலங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இக்குண்டு வெடித்திருந்தால் காலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், மற்றும் அலுவலக ஊழியர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டும் காயமடைந்துமிருப்பர் எனக் குறிப்பிட்டார்.

# இலங்கை இராணுவபடைப் பிரிவு 20 ஆம் திகதி ஹெயிட்டி புறப்படும்

## இராணுவ தளபதி தகவல்

(கொழும்பு)

இனிவரும் காலங்களில் இராணுவத்தைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு சேவைகளில் ஈடுபடுத்தப்படுவர் என இராணுவத் தளபதி லெப்ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

பனாகொட படைத்தளத்தில் ஹெயிட்டிக்குச் செல்லவுள்ள இராணுவத்தினரைக் கௌரவிக்கும் முகமாக நடத்தப்பட்ட நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது -

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 750 பேர் ஹெயிட்டிக்கு அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவதற்காக அனுப்பப்படவுள்ளனர்.

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக - இலங்கை இராணுவத்தினர் வேற்றுநாடொன்றில் அமைதிகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடச் செல்கின்றனர். இது இலங்கைக்கும் பெருமையைத் தேடித்தரும் ஒரு நிகழ்வாகும்.



ஹெயிட்டிக்கு செல்லவுள்ள இலங்கைப் படையினரின் அணி வகுப்பு.

எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படும் இந்த அணி ஹெயிட்டியில் ஏனைய நாட்டுப் படைவீரர்களுக்கு முன்னோடிகளாக விளங்கும்.

இந்த நிகழ்வு இலங்கை இராணுவத்தில் புதிதாகப் பலர் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பாகவும், இராணுவத்தினருக்கு சிறப்பைத் தேடித்தருவதாகவும் அமையும்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் ஹெயிட்டியில் கடமையாற்றும் சமாதானப் படையில் அரைவாசிப் படைவீரர்கள் அங்கு தரையிறங்கியுள்ளனர். அவர்களுடன் இலங்கை இராணுவத்தினரும் கடமையாற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையில், பெருந்தொகையான இலங்கை இராணுவத்தினர் இணைவது இதுவே முதற்தடவையாகும்.

இனிவரும் காலங்களில் இராணுவத்தைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு, சேவைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

### தாக்குதல்...

முகாமிற்கருகில் கொண்டுசெல்ல உதவுமாறு தெரிவித்து அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளார்கள்.

இவ்வாறான தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்ற போதிலும் இந்தத் தாக்குதல் நடத்தியோர் குறித்து உடனடியாக எதுவும் கூற முடியாது.

இது குறித்து நேற்று முழுவதும் விசாரணைகளை நடத்தினோம். அப்பகுதியில் பலருடனும் பேச்சுக்களை நடத்தினேன். இராணுவத்தினர் இச்சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனக் கூறுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினரையும் கருணா குழுவினரையும் குற்றம் சாட்டுகின்றனர்.

ஏ-5 வீதியின் எல்லை தாண்டிச் சென்று இந்தத் தாக்குதலை நடத்தியோர் பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியவில்லை.

இராணுவத்துடன் நாம் தற்போது தொடர்புகொண்டு விசாரணைகளை நடத்தி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடுகள் விபரம் கோரவில்லை!

## புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வீடுகள் தொடர்பான விபரங்களை புனர்வாழ்வு அமைச்சு கோரியிருப்பதாக வெளியான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என்று புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயசிங்க தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்து வெளியேறியோர் மற்றும் இப்பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கோயில்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள், தனியார் வீடுகள் என்பன தொடர்பான விபரங்களை புனர்வாழ்வு அமைச்சு கோரியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், இவ்வாறான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.